413

செந்தமிழ்ச் செல்வி

சிலம்பு-உ௦] சுபானு—சித்திரைமீ 1943 [பரல் சு

413.
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JUN 1943
MADRAS

பொருளடக்கம்

குறிப்புகள் :

பருப்பொருள் ஆராய்ச்சி :
த. பு. நவநீத கிருட்டினன், அண்ணமலை

திருவிளக்கு வழிபாடு :
புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

இளமுருகன் தமிழ் முடங்கல் :
"மா. கு."

"நிற்பது கூடாது" :
வித்துவான் மு. வரதராசனர், B.O.L.

தென்னட்டு வீரன் :
புத்தனேரி ரா. சுப்பிரமணியன்

ப்ராமனர் என்னும் சொற்பொருள் :
வித்துவான் மா. இராசமாணிக்கம் B.O.L.

செய்திகள் :

மதிப்புரை :

ஆண்டுக் கையொப்பம் ரூ. 3 0

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

031 N26
N43.20.6
199667

'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

தலைவர்:

திரு. பண்டித நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தஞ்சை.

---

2. ,, பி. சிதம்பரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
வழக்குரைஞர், நாகர்கோயில்.

3. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம். எல்.,
அட்வொகேட், தாகூர் சட்ட விரிவுரையாளர்,
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

4. ,, துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
பென்ஷன் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கோவை.

5. ,, மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், *அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.*

6. ,, டி. எஸ். கந்தசாமி முதலியாரவர்கள், பி. ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்.

7. ,, கா. ஸ்ரீ. சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், பி. ஏ.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

8. ,, வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், பி. ஓ. எல்.
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளி, சென்னை.

9. ,, வித்துவான் மு. இராசாக்கண்ணு அவர்கள், பி. ஓ. எல்.,
தமிழாசிரியர், செயிண்ட் அன்னி உயர்பள்ளி, சென்னை.

10. ,, இளவழகனாரவர்கள், கழகத் தமிழ்ப் புலவர்

மயிலாப்பூர் கள்ளுக்காரத் தெரு 'திருவருளக'த்திலிருக்கும்

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜ காரியதரிசியும்,

தருமபுர ஆதீன வெளியீடாகிய

மெய்கண்ட சாத்திரப் பதிப்பாசிரியரும்,

சைவத் திருவாளர் சிவஞானச் செல்வர்

ம. பாலசுப்ரஹ்மணிய முதலியார்

(பி.ஏ., பி.எல்., அட்வொகேட்)

என்னும்

மயிலைகிழார் இளமுருகனாரும்,

கேசவன்தமர் திருவடித்தொண்டனும்,

ஸ்ரீவைணவ ஸம்ப்ரதாயரும்,

சிறந்த கைங்கர்யபரருமாகிய

ஸ்ரீமாந் மாதவதாஸன் அவர்கள்

பிரசுரஞ் செய்திருக்கும்

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் விலை ரூ. 1-12

குறிப்பு: *கழிவு இன்மையால் கழகத்தில் ரூ. 1-14-க்குக் கிடைக்கும்.*



செந்தமிழ்ப் பாவலர்

பாரதிதாசனர்

சிலம்பு-௨௦] சுபானு—சித்திரை (1943) [பரல்-௯

குறிப்புக்கள்:

சைவப் பெரியார்

மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. அவர்கள்

நமது செந்தமிழ் நாட்டில் எத்தனையோ சான்றோர்கள் அவ்வப்போதும் தோன்றித் தமிழ் அறிவிற்கும் அருளுணர்வுக்கும் மாபெருந் தொண்டுகள் செய்து தம் புகழினை எதனாலும் அழியாவாறு நிறுவிச் சென்றிருக்கின்றார்கள். அதனால், காலந்தோறும் தமிழ்நாடு அடைந்துவரும் நலன்கள் அளப்பில்லாதனவாகும். தமிழ்நாடு அவர்கட்கு யாது கைம்மாறு செய்தல் இயலும்?

அணுக்கத்தில் திருவாளர், உமாமகேசுரம் பிள்ளை அவர்கள், பெரியார் ஞானியார் அடிகள், ஆசிரியர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் முதலிய பெருமக்கள் நமது நாட்டில் தக்க தொண்டுருவங்களாய் விளங்கி, நினைதொறும் நாட்டினர் உள்ளம் மறுகி அலமருமாறு பிரிந்து மறைந்தனர். அவர்கள் பிரிவினால் நாடு இன்னமும், ஆறுதலுறாது ஏங்கி நிற்கின்றது. இந்நிலையில் நம் நாட்டின் சைவச் செழுந்தொண்டரான பெரியார் சிந்து பூந்துறை மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B.A., அவர்களும்

14-4-43 புதன்கிழமை நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டமை மிகப் பெருந்துயர் தந்து உள்ளத்தை மிகுதியும் உருகச் செய்துவிட்டது.

சிந்துபூந்துறை, தமிழ்ச் சைவ வளம் பெரிது கெழுமிப் பொருநையாற்றின் பூங்கரையில் விளங்கிநிற்கும் பழம்பெருந் திருப்பதியாகும். அத் திருப்பதி திருவாளர் பிள்ளை யவர்களால் இந்நூற்றாண்டில் மிகவும் விளக்கமுடையதாயிற்று. பிள்ளையவர்கள் அரசியலில் 'தாசில்தார'ராக அலுவல் பார்த்து வந்த காலங்களிலும், பிற் காலங்களிலும் இடையறாது சைவத் தமிழ்ப் பெரும் பணி செய்து வந்தவர்கள். ஆண்டில் முதுமையுற்றவர்களானாலும், செயலிலும் சுறுசுறுப்பிலும் என்றும் இளைஞராகவே விளங்கியவர்கள்.

நமது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும், அதன் அறநிலையங்களுள் ஒன்றான தென்னிந்திய சைவ சித்தாந்தச் சங்கத்திற்கும், கழகத்தின் திங்கள் வெளியீடான 'செந்தமிழ்ச் செல்விக்'கும் பலகாலும் தலைவராய் அணுக்கராய் இருந்து தொண்டு புரிந்து வந்திருக்கின்றார்கள். நெல்லையில் வேறு பல பொதுத் தொண்டுகளிலும் கலந்து பணியாற்றி யுள்ளார்கள்.

சைவ சித்தாந்தக் கொள்கைகளை நன்றாகப் பரவச் செய்யவேண்டும் என்பது இவர்கள் அழுந்திய கொள்கையாகும். அதன்பொருட்டு இவர்கள் பற்பல ஆராய்ச்சிகளும் தொண்டுகளும் நெடுகச் செய்துவந்திருக்கிறார்கள். தேவாரத் திரட்டுக்குத் தெளிவான விளக்கங்களும் எழுதியிருக்கிறார்கள். திருக்குறளில் சைவ சமய உண்மைகள் தக்கவாறு விளங்குதல் குறித்தும், செந்தமிழ்ச் சொற்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்து துளும்புதல் குறித்தும் இவர்கள் பற்பல ஆராய்ச்சிகள் செய்து, சொற்பொழிவுகள் முகமாகவும்

கட்டுரைகள் முகமாகவும் நன்கு விளக்கியிருக்கின்றார்கள். இன்னும் பற்பல தொண்டுகள் செய்யவேண்டுமென்று கருதியிருந்ததாகவும் தெரிகின்றது.

இத்தகைய அரிய சைவப் பெரியார் அணுக்கத்தில் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டமை எண்ணுதொறும் உருக்கம் விளைத்து வருகின்றது. இவர்கள் ஆருயிர் எல்லாம் வல்ல முழுமுதற் சிவமாகிய இறைவன் திருவடி நீழலிற் பொருந்தி என்றும் அமைதியுறுக எனத் திருவருளை நினைந்து வழுத்துதலோடு, இவர்கள் குடும்பத்தாருக்கும் கழகத்தின் ஆறுதலுரையை இதன் முகமாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

* * * * *

தமிழர் சமயம்

தமிழ் மக்கள் நாவலந்தீவு என்னும் இந்திய நாட்டின் பழங்குடி மக்களாவர். ஆரியமக்கள் இந் நாட்டிற்கு வருவதற்கு முன்னிருந்தே தமிழர் சிறந்த நாகரிக வாழ்க்கையில் வாழ்ந்தவர்கள். 'மொகஞ்சோதாரா' நாகரிகமானது தமிழர் நாகரிகத்தைச் சிறப்பாக விளக்கிக் காட்டுகின்றது. இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட 'தொல்காப்பியம்' என்னும் தமிழ் இலக்கண முதல்நூல், தமிழர் கொள்கைகளை நன்குகத் தெளிவுபடுத்துகின்றது.

சமய வாழ்க்கை யென்பது உயர்ந்த நாகரிகமுடைய மக்களிடமிருந்தே அரும்பி உருவாவதற்குரியது. உலக வாழ்க்கையில் பன்னெடுங்காலப் பழக்கமும், இன்பதுன்பங்களின் அழுந்திய நுகர்வும், பல்வேறு வகையான உயிர்த்தொகுதிகளின் நெருங்கிய கூட்டுறவும், அறநெறி உண்மைகளும் வாய்ந்து பெருவாழ்வு வாழும் நாகரிக நன்மக்களே இம்மை மறுமை வாழ்வாகிய சமய வாழ்க்கையை ஆராய்ந்து கண்டு அறிவுறுத்துதற்குரியர். ஆதலால், தமிழ் மக்கள் பழமையான சமயவாழ்க்கை உடையவர்கள் என்பது ஐயுறவின்றித் தெளியக்கூடியதேயாம்.

இந்திய நாட்டில் இப்போது பலவகையான சமயப் பெயர்கள் கேட்கப்படுகின்றன. சமயங்கள், பெரும்பாலும், வாழ்க்கையில் உயர்வகையான இன்பத்தைத் தேட முயன்றிருக்கின்றன. வாழ்க்கையானது துன்பம் கலந்திருப்பதனாலேதான் இம் முயற்சியைச் சமயங்கள் மேற்கொள்ளலாயின. பெரும்பான்மையான சமயங்கள் இம்மையோடு மறுமையும் உண்டென்று நம்பியே இம் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றன எனலாம்.

இங்ஙன்மான இச் சமயங்கள், **குருமாரையே** முடிந்த தலைவராக எண்ணிச் செல்லுவனவும், **இறைவனையே** தலைவனாக எண்ணிச் செல்லுவனவும் என இருவகைப்பட்டு நிற்கின்றன. தமிழ் நாட்டில் மிகப் பழைய நூல்களாக உள்ளவற்றில் **தெய்வக் கொள்கை** இல்லாத நூல் எதுவும் இல்லை. தெய்வம் என்பது இயல்பாகவே பேரறிவு பேரருள் முதலியன உடையதென்று நூல்கள் விளக்கி யிருக்கின்றன. உலகுக்கு அவனே தலைவன் என்றும் அறிவுறுத்துகின்றன. பிறப்பிறப்பில்லாதவன் என்றும் தேற்றுகின்றன. **குருமாரென்போர்** இயற்கையே அத்தகைய நிலைகள் உள்ளவர்களாகக் காணப்படவில்லை.

குருமாரைத் தலைவராகவுடைய சமயங்களுள் மிகவும் பழைமையானது **சமண் சமயம்** என்று கூறலாம். இறைவனைத் தலைவனாகவுடைய சமயங்களுள் மிகவும் பழைமையானது **சைவ சமயம்** என்று கூறலாம். இவ்விருவகைச் சமயங்களுள்ளும் பழைமையானது எதுவென்பது இங்கே ஆராய்வதற்குரியது.

சமண் சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் பெரும்பான்மையும் நெருக்கம் உண்டு. சைவ சமயத்தில் நந்தியெம் பெருமானைக் குருவாகக்கொள்ளும் மரபு உண்டு. நந்தியெம் பெருமானுக்கு 'ரிஷபதேவர்' என்னும் பெயருங் கேட்கின்றோம். சமண் சமயம் 'ரிஷப தேவரை'யே 'ஆதி தீர்த்தங்கரர்' என்னும் முதற் குருவாகக் கொண்டுள்ளது. மகாவீரர் அச் சமயத்தின் கடைசி தீர்த்தங்கரராவர்.

இனி, சமண்சமயமும் சைவசமயமும், உயிர் உண்மையையும், வினை உண்மையையும், மறுமை உண்மையையும், 'சத்தியம்' 'அகிம்சை' உண்மைகளையும் பொதுவில் ஒப்புக்கொள்ளும் ஒற்றுமையுடையனவா யிருக்கின்றன.

ஆதலால், இவ்விரண்டுக்கும் உள்ள முதன்மையான வேறு பாடெல்லாம், மிகச் சிலவேயாகும். அவற்றுள்ளும் மிக முதன்மையானது, சமண் சமயத்திற்குக் கடவுள் உண்மை இல்லாததும், சைவ சமயத்துக்குக் **கடவுள் உண்மை** உள்ளதுமேயாம். அடுத்தபடி, வீடுபேற்றை அடைவதற்குச் சமண்சமயம் உலகையும் பெண்ணையும் புறத்தேயும் வெறுத் தொதுக்கும் துறவு நெறியை உரிய நெறியாகக் கடைபிடிப்பதும், சைவசமயம் அங்ஙனம் உலகையும் பெண்ணையும் புறத்தே வெறுமல் **அகத்துறவு நெறியை** உரியநெறியாக மேற்கொள்வது மாகும்.

இங்கே காட்டிய இவ்விரண்டு கொள்கை வேறுபாடுகளில் பழைய தமிழ் நூல்களில் ஆதரவுபெற்ற கொள்கைகள் எவை என்பது ஆராய்ந்தனமாயின், இவற்றுட் பழைய சமயம் எது வென்பது இனிது வெளிப்படும். தமிழ் மொழியில் உள்ள மிகப் பழைய நூல் **தொல்காப்பியம்** என்பது. அதனில் தெய்வக் கொள்கையைப்பற்றி வருகின்ற இடங்கள் அங்கங்கும் இருக்கின்றன. 'அகத்திணையிய'லில் கருப்பொருள்களைப் பற்றிக் கூறுகின்ற இடத்தில், "தெய்வம் உணாவே மாமரம் புட்பறை" என ஒரு நூற்பா கூறப்படுகின்றது. அதன்கண், தமிழருடைய தெய்வ வழிபாட்டு முறை 'தெய்வம்' என்னுஞ் சொல்லினலேயே எடுத்துக் காட்டப்படுதலை அறிகின்றோம். இனி, முதற் பொருளைக் கூறுகின்ற இடத்தில், ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய தெய்வக்கொள்கை நுவலப்பட்டிருக்கின்றது. முருகக் கடவுளைப்பற்றிய உண்மைகளும், இறைவியைப்பற்றிய உண்மைகளும் பொருளதிகாரத்தின் 'புறத்திணை யியல்' முதலிய இயல்களில் அங்கங்குங் கூறப்பட்டிருக்கின்றன. 'புறத்திணை இய'லிற் "கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்று வருகின்ற தொடரில், கடவுள் வாழ்த்து என்னுங் கொள்கை வருதலைக் காணலாம். 'மெய்ப்பாட்டிய'லில் "தெய்வம் அஞ்சல் புரையறம் தெளிதல்" என்னும் நூற்பாவில், தெய்வம் அஞ்சியொழுகும் தமிழர்தம் ஒழுகலாறு விளக்கப்பட்டுள்ளது. இவ்வாற்ருல், 'தொல்காப்பியம்' என்னும் மிகப் பழைய நூலில், **தெய்வக் கொள்கை** அங்கங்கும் எடுத்துக் காட்டப்பட்டிருத்தல் அறிந்துகொள்ளப்படும்.

இனிக், 'கற்பியலின்' இறுதியில்,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்று வருகின்ற நூற்பாவில் உலகையும் பெண்ணையும் புறத்தே வெறுது அகத் துறவோடு இருந்து, தவப்பயிற்சி கொள்ளும் உண்மை நன்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. மேலும், தொல்காப்பியத்தில், பொருளதிகாரமென்னும் முதன்மையான அதிகாரத்தில் பொருளின்ப அறவொழுக்கங்கள் செவ்வையாய்த் தெளித்தெடுத்து உரைக்கப்படுதலும் இங்கே நினைவு கூர்தல் வேண்டும்.

இங்ஙனமே திருக்குறள் என்னுங் கடைச்சங்க காலத்து அறநூலிலும் "அகர முதல எழுத்தெல்லாம்" என்னும் முதற் குறளிலேயே, 'இறைவன் உலகுக்குத் தலைவன்' என்பதும், கடவுள் வாழ்த்து என்னும் அம்முதலதிகாரத்தின் இறுதியில் 'பிறவிப் பெருங்கடல் நீந்துதலே முடிந்த பேறு' எனக் காட்டி அதன்கண், இறைவன் அங்ஙனம் பிறப்பு முதலியன இல்லாத வன் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. மேலும், பொருள் அற இன்ப வொழுக்கங்கள் இம் மாபெரு நூலிலும் விளக்கப்பட் டுள்ளமை தெளிபொருளேயாம்.

இனிக், கடைச்சங்க காலத்தின் இறுதியில் எழுந்த சிலப்பதி கார மென்னும் அரிய தமிழ்ப் பெருங் காப்பியத்தில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்"

எனப் பிறப்பு இறப்பில்லாத ஒரு முழுமுதற் கடவுளின் நிலை யையே தெய்வப் பெயர் வரிசையின் முதற்கண் எடுத்து ஆசிரியர் இளங்கோவடிகள் நிறுவி விளக்கி யிருக்கின்றார். நூலின் இறுதியிலும்,

"தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்."

என்று தக்க அறிவுரை நிறுத்திக், கடவுள் உண்மையையும் அத னைத் தெளிந்த குருமாரின் பெருமையையும் வேறு வேறாக வைத்து விளக்கி முடித்திருக்கின்றனர். இன்னும், சிலப்பதிகாரக்

காப்பியத்தின் மூவகை நோக்கங்களாக ஆசிரியர் உரைப்ப வற்றுள்,

"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்"

என்னும் **பெண்களின் மேன்மை** ஒரு நோக்கமாகச் சிறப்புற்றிருத்தலும் அறிதல் வேண்டும்.

இங்ஙனமெல்லாம் பழம் பெருந் தமிழ் நூல்களில், தமிழர்களின் முதன்மையான ஒழுக்கங்களாக வைத்து விரித்தோதப் படுகின்றவை, சைவசமய உண்மைகளுக்கே பேராதரவாய் இருத்தல் தெளிவாக விளங்கிநிற்கின்றன. எனவே, தமிழ் மக்களின் பழம் பெருஞ் சமயம் சைவசமயமேயாதல் தெற்றெனத் தெளியப்படும். **தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம்** முதலிய நூல்களும் சைவசமய உண்மைகளுக்கே வலிமை தந்து அரண்கோலி நிற்றல் உணர்ந்துகொள்ளப்படும்.

இனி, இத்தகைய சமய வாழ்க்கையை மேற்கொண்ட தமிழ் மக்களுள், அவ் வாழ்க்கையை நெறியுறப் பின்பற்றுது அதற்கு மாசு விளைப்பவரும் நாளடைவில் உளராதல் இயற்கையேயாம். அதனால் தமிழ் மக்களுள் ஒரு சிலர்க்குத், **தெய்வக் கொள்கையி**லும் **அகத்துறவு மேற்கொள்ளுத**லிலும் ஐயுறவு உண்டாகி அவற்றின் நீங்கி ஒழுகுதலும் இயல்பாயிற்று. அங்ஙனம் நீங்கி யொழுகிய தமிழ் மக்களே, **சமண் சமயத்த**வராவர் என்பது. எனவே, சமண் சமயத்தில் ஏனைப் பெரும்பான்மையான கொள்கைகள் தமிழர் சமயக் கொள்கைகளேயாதல் யாவரும் ஒப்பமுடிந்த உண்மையேயாம்.

அண்மையிற் சென்னையில் நடைபெற்ற **மகாவீரர் திருநாள்** விழாவில் தமிழ்ப் பெருமகனார் **சர். R. K. சண்முகஞ் செட்டியாரவர்கள்** தலைமை தாங்கிப் பேசியபோது, சமண்சமயம் தமிழர்சமயம் எனத் தமிழர் சமயமாக அதனை இயைத்துப் பேசிய தலைமையுரையும் இவ்வாற்றால் ஒற்றுமையுற்று நிற்றல் காணப்படும்.

மற்றுச், சமண்சமய உண்மைகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, அதற்கு மேலும் விரிந்து, தெய்வக் கொள்கையும் அகத்துறவும் மேற்கொள்ளுத லுடையதாய், இவ்விந்தியத் தமிழ்

நாட்டிற் பழம்பெருந் தமிழர் சமயமாய் என்றும் விளங்கி நிற்பது சைவசமயமேயாதல் தெற்றெனத் தெளியப்படும் என்க.

இவ்வுண்மையைத், தென்றமிழ் நாட்டில் தமிழ் மக்களின் நடுவிற் பலகாலம் வாழ்ந்திருந்து, தமிழ் மக்களின் பழக்க வழக்க ஒழுக்கங்களை நேரிருந்து கண்டு பழகியும், தமிழ் நாட்டின் சிறந்த தமிழ் நூல்களாகிய **திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம், நாலடியார்** முதலியவற்றை நன்கு பயின்றும் விளங்கியவரான **டாக்டர். ஜி. யு. போப்** என்னும் மேலைநாட்டு ஆசிரியர், தாம் இயற்றிய திருவாசகத்தின் மொழிபெயர்ப்பு நூலில் ***சைவ சமயமே தமிழர் பழம்பெருஞ் சமயம்** எனக் கட்டுரைத்து நிறுவி இனிது விளக்கியிருத்தலும் இங்கு நினைவுகூறற்பாலது.

"நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே."

—ஐங்குறுநூறு.

---

* "The Caiva Siddhanta System is the most elaborate, influential, and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian, and Tamil religion....... Caivaism is the old prehistoric religion of South India, essentially existing from Pre-Aryan times, and holds away over the hearts of the Tamil people."

—Dr. G. U. POPE.

பருப்பொருள் ஆராய்ச்சி

[து. பு. நவநீத கிருட்டினன், அண்ணாமலைநகர்]

பருப்பொருள் எந் நுண்பொருள்களால் ஆக்கப்பட்டுள்ளது? எனும் வினாவை மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாய்க் கேட்டுக்கொண்டே யுள்ளனர். பருப்பொருளின் ஈற்றான தன்மையைக் கண்டுபிடித்தற்கு இடையறாது ஆற்றப்பட்டு வரும் பணிகள்மூலமாய்க் கிடைத்த அறிவே விஞ்ஞானமாம். எனவே, பருப்பொருளின் மறைபொருளைக் காணும்பொருட்டுக் கையாளப்பட்ட சோதனைமுறைகளினின்றெழுந்த விஞ்ஞான விளைவியல்கள் விஞ்ஞான வெற்றியின் அறிகுறிகளாம்; பருப்பொருளின் மறையைக் காண இயலாதுள்ளது, 'ஆராய்ச்சியே விஞ்ஞானம்' என்பதை விஞ்ஞானிகள் மனத்திலுறுத்த இயற்கையன்னை தரும் எச்சரிக்கையாம்.

பலபல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, நமது இந்திய நாட்டுப் பேரறிஞரில் ஒருவரான கானடா என்பார், பொருள்கள் எல்லாம் இடையறாது இயங்கிக்கொண்டே யுள்ளன வென்றும், அவை, நுண்ணிய துகள்களாலானவை யென்றும் சிந்தனை வாயிலாகவே கண்டு பிடித்தார். கிரேக்க நாட்டுப் பேரறிஞரில் ஒருவரான டெமாக்ரிடஸ் (Democritus) என்பாரும் இதுபோன்ற முடிவையே வெளியிட்டார். அவர், பருப்பொருளின் அறிவீற்றான பகுதிகளுக்கு அணு (Atom) எனப் பெயரிட்டார். அச்சொல் இனிப் பகுக்க இயலாததொன்று எனப் பொருள்படும். டெமாக்ரிடஸ் விரித்த 'அணுவியல் கொள்கை' (Atomic theory) யைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவோம். ஒவ்வொரு பொருளும் அதன் தன்மையதான நுண்ணணுக்களாலானது. பல பொருள்களினிடையுள்ள வேற்றுமைகள் இவ்வடிப்படையான பலதிற அணுக்களின் தன்மைகளிடையுள்ள வேற்றுமைகளால் ஏற்படுகின்றன. நீரின் அணுக்கள் மழமழப்பாகவும் உருளையாயும் இருப்பதால், அவற்றாலான பொருள் நீரியலாயுள்ளது. இரும்பின் அணு கரடுமுரடாயும் கடினமாயும் உள்ளது. அதனால், அவற்றாலான பொருள் கடினமான திண்பொருளாயுள்ளது. பலவகையான வடிவவேறுபாடுகளை முன்னிட்டுப் பல நிறங்கள் தோன்றுகின்றன. இவ்வாறே பொருள்களின் பல தன்மைகளுக்கும் காரணம் அவற்றின் அணுக்களின் தன்மைகளேயாம்.

அநேக நூற்றாண்டுகளாய் டெமாக்ரிடஸின் அணுவியல் கொள்கையை அவ்வக்காலத்துப் பேரறிஞர் ஒப்புக்கொண்டே வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டு தொடங்கிற்று. ஜான் டால்டன் (John Dalton) என்ற ஆங்கிலப் பள்ளியாசிரியர் புது வணுக் கொள்கை யொன்றை வெளியிட்டார். அக் கொள்கையின் முக்கியமான கருத்துக்கள் பின்வருமாறும்: "எல்லாப் பொருள்களும் சில மூலப்பொருள்களினின்று இயைபு மாற்றங்களால் (Chemical Changes) உண்டானவை. இம் மூலப் பொருள்களுக்கு 'அடிப்பொருள்கள்' (Elements) என்று பெயர். இவ்வாறுன அடிப்பொருள்கள் அவற்றிற்கான அணுக்களாலானவை. எனவே, அடிப்படைப் பண்பில் வேறுபட்ட அணுக்கள் சிலவேயாம். பல்வேறுபட்ட வகைகளிலும் பல் வேறுன எண்களிலும் இவை இயைபுமுறையில் சேர்வதால் எல்லாப் பொருள்களும் உண்டாகின்றன." எனவே, டெமாக்ரிடஸ் 'அணு'வெனக் குறித்ததும், டால்டன் 'அணு'வெனக் குறித்ததும், பெயரளவில் மட்டுமே ஒன்றன்றி பொருளில் வேறுபட்டவையேயாம்.

டால்டன் அணுவியல் கொள்கையை வெளியிட்டபோது, விஞ்ஞான அறிஞர் பலர் அதையேற்க மறுத்தனர். ஏனெனின், அக்காலத்தே, புலன்களாலறிய வியலாத அறிவெதுவும் விஞ்ஞானமன்று எனும் கருத்துப் பேரறிஞர் மனத்திலூன்றி, பொது மக்களிடையும் பரவி வந்தது. டெமாக்ரிடஸ் போன்ற பண்டைக் காலத்துப் பேரறிஞரின் கொள்கைகள் வெறும் கற்பனையியலானவை யென்றும், சோதனை வாயிலாய் நிலைநாட்டப்படாத கொள்கைகள் எவையாயினும், அவை, தம் சீரிய சிந்தனைக் குகந்தவை யன்றெனவும் அக்காலத்துப் பேரறிஞர் பலர் எண்ணினர். எனினும் சிறிது சிறிதாய் டால்டன் கொள்கையின் சிறப்பை அறிஞர் உணரலாயினர். டால்டன் தன் கொள்கைகளைப்பற்றி விரிவாய் எழுதி வைத்தார். அவர் குறிப்பிட்ட முறையைப் பின்பற்றி, பலவகையான இயைபு மாற்றங்களைப் பற்றியும், இயைபுப்பொருள்களின் சேர்க்கைகளைப்பற்றியும், ஒருவாறு அறிய இயன்றது. இயைபு அடிப்பொருள்கள் ஒன்று சேர்ந்து கூட்டுப்பொருள்கள் (Compounds) ஏற்படும்போது, அவை குறித்த சில வீதங்களில் மட்டுமே சேருமெனத் தம் கொள்கையினின்று காட்டினர். அவர் எடுத்துரைத்த நிறைவீத முறைமை நிலைநாட்டப்பட்டது. எனவே, அணுக்களை நேரேயாவது உருப்பெருக்கம் செய்யும் கருவிகளின் துணை கொண்டாவது காண இயலாவிடினும், டால்டன் கொள்கை ஒருவாறு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆண்டுதோறும் டால்டன் கொள்கைக்கு உடன்பட்ட இயைபு விஞ்ஞானிகளின் தொகை அதிகரித்து வந்தது. குறித்த

சில அடிப்பொருள்களே யுள்ளனவெனும் உண்மை ஒப்புக் கொள்ளப்பட்டது. டால்டன் முறையைப் பின்பற்றுவதால், இவற்றிற்கான அணுநிறைகள் (Atomic Weights) கண்டு பிடிக்கப்படலாம் என்று அறியப்பட்டது. அணுக்களைத் தனியே காணமுடியாமையின் அவற்றை நிறுக்கவும் முடியாது. எனவே, அணுநிறை யென்பது ஓரணுவின் நிறையன்று. ஒரே எண்ணிக்கையான அணுக்கள், பல அடிப்பொருள்களினின்று பெறப்படினும், அவை ஒரே அளவான இடத்தில் இருக்கும். எனவே, ஒரேயளவான இடத்தில், பல அடிப்பொருள்களை இருக்கச் செய்து, நிறுப்பதால், ஒப்பியலான அணுநிறைகளைப் பெறலாம். இவையே அணுநிறைகளெனப்படுகின்றன. இவ்வணு நிறைகளை மூலமாய்க் கொண்ட ஒழுங்குமுறை யொன்று இயைபு நூலில் தலையாய இடம் பெற்றுள்ளது. பின்னர்ச் செய்யப்பட்ட சோதனைகளும் டால்டன் கொள்கையின் உண்மையைக் காட்டின. பல்லாண்டுகளுக்குப் பின் செய்யப்பட்ட சோதனைகளினின்று ஓரளவுள்ள இடத்திலுள்ள அணுக்களின் தொகையைக் கணக்கிடவும் இயன்றது. எனவே, ஓரணுவின் நிறை என்னவென்றும் அறியப்பட்டது.

அணுவென்பது 'இனிப் பகுக்க இயலாதவொன்று' என்றார் டெமாக்ரிடஸ். டால்டனும் அது சரியே யென்றனர். ஆனல், 1897-ம் ஆண்டில், ஜே. ஜே. தாம்ஸன் (J. J. Thomson) என்ற விஞ்ஞான மூதறிஞர், 'அணு' பொருளின் ஈற்றான பகுதியன்று என, தக்க சான்றுகளுடன் நிலைநாட்டினர். பெரும் விளைவுகளுக்கு அடிகோலிய அவர் சோதனைகள், க்ரூக்ஸ் (Crookes) என்பார் செய்த சோதனைகளைப் பின்பற்றியவையாம். க்ரூக்ஸ் செய்த சோதனை பின்வருமாறும் :

"ஒரு நீண்ட கண்ணாடிக்குழாயின் இரு நுனிகளிலும் சிறு உலோகத்தகடுகள் வைக்கப்பட்டன. பின், அக் குழாய் வெற்றிடமாக்கப்பட்டது. அதாவது, அதிலுள்ள காற்று காற்றிறைவியால் அகற்றப்பட்டது. ஆனல், காற்றை முற்றும் அகற்ற முடியாது. பெரும்பகுதி யகற்றப்படினும், மிகமிகச் சொற்பமேனும் எஞ்சியிருக்கும். அதன் அமுக்கம் மிகக் குறைவாயிருக்கும். உலோகத்தகடுகள் வெளியே செல்லும் இருகம்பிகளுடன் இணைக்கப்பட்டவை. அவற்றினுடன் ஒரு மின்னெழுப்புச்சுருள் (Induction Coil) கம்பிகளால் சேர்க்கப்படும். இதனல் மின்னெழுப்புச்சுருள் பயக்கும் வலிமைமிக்க மின்சாரம் அக் குழாயினுள் பாய்கின்றது. இதற்கு 'மின்சார வீச்சு' (Electric Discharge) என்று பெயர். அக் குழாயின் ஒரு முனைக்கு

'நேர்முனை' (Anode) என்றும், மற்றோர் முனைக்கு எதிர்முனை (Cathode) என்றும் பெயர். மின்சாரம் பாயும்போது, குழாயில் ஊதாஒளி காணப்படும். எதிர்முனையினின்று மிளிரும் இவ்வொளிக்கு 'எதிர்முனைக் கதிர்கள்' (Cathode Rays) என்று பெயர். அவற்றினருகில் ஒரு காந்தச் சட்டத்தை க்ரூக்ஸ் வைத்தபோது, அக் கதிர்கள் சென்ற திக்கு மாறுபட்டது."

கதிர்கள் சென்ற திக்கு காந்த வலிமையால் பாதிக்கப் பட்டதைக் கண்ட க்ரூக்ஸ் மலைத்துப்போய் நின்றார். ஏனெனின், பொருண்மையுடைப் பொருள்களே காந்தவியலால் இயக்கப் படும் என அவர் அறிவார். பொருண்மை யற்றதெனக் கருதப் பட்ட ஒளி பொருண்மைத் தன்மையைக் காட்டிற்று. தான் கண்ட கதிர்கள், ஒளியா அன்றிப் பொருளா என்ற ஐயமே அவரை வியக்கச் செய்தது. கதிரியலும் பொருளியலும் ஒருங்கே பெற்ற அவ்வொளியை, அவர், 'கதிர்யல் பொருள்' (Radiant Matter) என அழைத்தார். ஆனல் அவரது பணி அத்துடன் நின்றது. தான் கண்ட வியத்தகு ஒளி ஏன் தோன்ற வேண்டும் எனும் வினவிற்கு விடைபெற அவர் எண்ணவில்லை. கதிர்முனைக் கதிர்களின் மறை மறையாகவே யிருந்தது.

ஜே. ஜே. தாம்ஸன் எதிர்முனைக் கதிர்களைப் பற்றின ஆராய்ச்சியிலிறங்கினர். பலவகையான சோதனைகள் செய்தார். ஆண்டுகள் பல கழிந்தன. அவர் செய்த சோதனைக் குறிப்பிதழ்கள் குவியலாயின. முன்னர், பாரடே (Faraday) யென்ற விஞ்ஞானப் பேரறிஞர், உப்புக்கரையங்களினூடே மின்சார ஓட்டம் ஏற்படும்போது காணப்படும் விளைவுகளினின்று மின்சாரம் அணுவியலானது என்று காட்டியுள்ளதை நினைவு கூர்ந்தார். நெட்டியுண்டை யொன்றின் நிறை, அது மின்சாரமேற்றப்பட்ட பின் அதிகரித்தலைத் தாம்ஸன் கண்டு, அந்நிறை யேற்றம் மின்னூட்ட நிறையினல் ஏற்பட்டது எனத் தெளிந்தார். இவ்வாறு, மின்னியலான விளைவுகள் பலவற்றையும் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்து, மின்னியல் பொருட்டன்மை யானது என முடிவு கட்டினர். இம்முடிவை, அவர், 1897-ம் ஆண்டு ஏப்ரல் 30-ம் நாள் அரச விஞ்ஞானச் சங்கத்தினர்க்கு (Fellows of the Royal Society) எடுத்துரைத்தார்.

"எதிர்முனைக்கதிர்கள், எதிர் மின்சாரத்தின் (Negative Electricity) நுண்கூறுகள். எதிர்முனைக் கதிர்க்கற்றை யொன்று நுண்மின்சாரப் பொருள்கள் அல்லது மின்னணுக் (Electron)

களாலானது. மின்சாரம் ஒரு கண்ணடிக் குழாயிலுள்ள காற்றினூடே பாயும்போது, அக் காற்றின் அணுக்களினின்று, மின்னணுக்கள் பறிக்கப்படுகின்றன. வேறு எவ் வாயு கண்ணடிக் குழாயிலிருப்பினும் மின்னணுக்கள் கிடைக்கின்றன. வெவ்வேறு பொருள்களினின்று பெறப்படும் மின்னணுக்களும் ஒன்று போன்றவையே. எல்லா அடிப்பொருள் அணுக்களிலும் அவை உள்ளன. எனவே, அணு பொருளின் ஈற்றான பகுதியன்று. அணுவைப் பிளக்கலாம். அணுவைவிட நுண்ணிது மின்னணு." என்பதே அவர் சொல்லியதின் சாரம்.

பின்னர், தாம்ஸன், தான் கண்டுபிடித்த முடிவை, நன்கு நிலைநாட்ட எண்ணி, இன்னும் பல சான்றுகளைப் பெறுதற்கான சோதனைகளைச் செய்வதில் ஈடுபடலாயினர். அச் சோதனைகளிலொன்று, மின்னணுவின் பொருண் நிறையை (Mass) அளக்க அவர் செய்ததாம். காந்த வலிமை எத்துணை என்றறியப்பட்ட காந்தச் சட்டங்களை (Bar Magnets) வைக்கும்போது எதிர் முனைக் கதிர்க்கற்றை யொன்றிலேற்படும் விலகலை, அவர் அளந்தார். இவற்றினின்று, தமது தேர்ந்த அறிவாலும், எண் நூல் பயிற்சியாலும், பெற்ற துணையைக் கொண்டு மின்னணுவின் பொருண்மை நிறையைக் கணக்கிட்டார். அந்நிறை, அடிப்பொருள்கள் யாவற்றினுள்ளும் மிகவும் குறைந்த நிறையுடைய நீரிய (Hydrogen) அணுவைவிட ஆயிரத் தெண்ணூறு மடங்கு குறைவாகவுள்ளது.

விஞ்ஞான அறிஞர் எவரும் தாம்ஸன் எடுத்துரைத்த முடிவுகளை மறுத்துரைக்க முன் வரவில்லை யெனினும், அவர்களிற் சிலர், அம் முடிவுகள் திண்ணமாய் நிலைநாட்டப்பட வில்லை யெனும் கருத்தை வெளியிட்டனர். "எல்லாம் எண்ணியலால் பெற்ற முடிவுகளே. மின்னணுக்கள் உள்ளன வென்பதற்கான சோதனைச் சான்றுகள் இலவே" எனத் தம்முள் பேசிக் கொண்டனர். தாம்ஸனும், சோதனைச் சான்றுகளால் அரணுக்கப்பட்ட முடிவுகளே நன்கு நிலைநாட்டப்பட்டவை யெனும் கருத்துக்கொண்டவர். எனவே சோதனைச் சான்றுகளை நாடினுர். தம் மேற்பார்வையின்கீழ் ஆராய்ச்சிகள் செய்துவந்த மாணுக்கர் சிலரை அப் பணியிலீடுபடச் செய்தார். அவர்களில் ஒருவரான வில்சன் (Wilson) என்பார், தன் ஆசிரியர் காட்டிய வழியைப் பின்பற்றி, சோதனைகள் செய்யலாயினர். அவற்றினின்று மின்னணுக்கள் உளவென மெய்ப்பித்தார். அவர் செய்த சோதனை பின்வருமாறும். "நீராவி கலந்துள்ள காற்றை ஓரிடத்தில் அடைத்து வைத்து, அவ்விடத்தைச் சடுதி

யில் விரித்தால், காற்று குளிர்ச்சி யடைகின்றது; அதனால் நீராவி நீர்த்துளிகளாய் மாறுகின்றது. அவ்வாறு அவை இறுகும் போது, காற்றிலுள்ள சிறு தூசிகளை நடுவாய்க் கொண்டு துளி கள் உருவாகின்றன என்பதை அவர் முன்பே அறிந்திருந் தார். தூசிகள் மிகச் சிறியவையாதலின், துளிகள் அவற்றின் மீது ஏற்படும் முன், அவற்றை (தூசிகளை)ப் படம்பிடிக்க இயலாவிடினும், நீர்த்துளிகள் படிந்தபோது, அவை புலப்படு கின்றன. தூசிகளே யில்லாத காற்றில் துளிகள் உண்டாவ தில்லை. எனவே, தூசியற்ற காற்றினுள் மின்சாரம் செலுத்தப் படின், மின்னணுக்கள் நீர்த்துளிகளுக்கு நடுவாகி, அவற்றின் படம் எடுக்கப்படலாம் என வில்சன் எண்ணினார். அவ்வாறே, தானமைத்த 'மங்குல் அறை' (Cloud Chamber) என்ற கண்ணு டிப் பெட்டியில் தன் சோதனையைச் செய்தார். தான் எண் ணிய வண்ணமே, மின்னணுக்கள் நீர்த்துளிகளுக்கு நடுவாய்க் காட்சி யளித்தன. எனவே, மின்னணுக்கள் உண்மையில் உள்ளனவே யென்பதை அவர் நிலைநாட்டினார்.

(தொடரும்)

முருகன் துதி

முருகனெனப் பெயர்கொண்டு மூவுலகுந்
தொழநின்ற முதல்வா! என்றும்,
தருநிழலே! தண்ணளிசேர் தற்பரனே!
தயாநிதியே! யருளாய் என்றும்,
உருகுமனத் தடியார்கள் உளத்துளொளிர்
விளக்கே! நின் னுடைமை யானேன்
தருகநின தருளென்றே யான்வேண்டல்
எற்றுக்கோ? அறிவை நீயே.

சேவற்கொடியோன் சிலம்படி வாழ்க.

—வித்துவான் மு. நமச்சிவாயன்.

திருவிளக்கு வழிபாடு

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

க. கதிருற்றேன் கடனுற்றி மேற்றிசையில்
கலந்தவுடன் கனிவு காட்டிக்
குதியுற்று ஒருநொடியில் குவலயத்தே
குடிகொண்டு குவிந்து நிற்கும்
கதியற்ற மூதேவி முன்னிருளைக்
கலைத்தில்லம் கவினுற் றேங்க
மதியொற்று வைகின்ற வாடாத
மணிவிளக்கே! வணக்கம் அம்மா!

உ. விண்ணொத்து மிகப்பாவும் அன்பொளியில்
கலப்புற்று வீயா வேட்கைக்
கண்ணொத்து வாழ்கின்ற காதலர்தம்
கவினோங்கும் இல்லம் சேர்ந்து
கிண்ணத்திற் பால்பழமும் கிளிமொழியாள்
வழிபாடும் கீர்த்தி ஏற்கும்
வண்ணத்தே பொன்னொத்த செஞ்சுடரே!
திருவிளக்கே! வணக்கம் அம்மா!

ந. நெய்யாகப் பெய்கின்ற அன்பதனை
நீள்திரியாய் நிலவு கின்ற
மெய்யான வழியேற்றின் வீறுகொளும்
சுடர்அறிவாய் விளங்கி நிற்கும்;
மையான இருள்நீங்கும்; மனத்தில்ஒளி
வளர்ந்தொளிரும்; மணிவி ளக்கே!
பொய்யாத ஒளியுன்றன் ஒளியலவோ?
பொற்புடையாய்! புனிதத் தாயே!

ச. திருநாளின் போதுன்னைச் சிந்தித்துத்
தேடாத செயலும் உண்டோ?
திருநாணைப் பூட்டுங்கால் நீயின்றேல்
அதிலேதும் சிறப்பும் உண்டோ?
திருக்கோயிற் பெருஞ்சோதிச் சிவனார்முன்
நீயின்றேல் தெளிவும் உண்டோ?
திருவாக்கும் செயலெல்லாம் திகழ்கின்ற
சிறப்பே!எம் திருவி ளக்கே!

ரு. நற்கணவன் வாய்க்கவென நங்கையர்கள்
நாவாரத் துதித்து நிற்பர்;
கற்புடைய மடவார்தம் காதலரின்
நல்வாழ்வைக் கருதி நிற்பர்;
கற்பவற்றில் கருத்தூன்றித் தேர்ச்சிபெற
மாணவரோ கைகு விப்பர்;
பற்பலர்க்கும் அருள்தருவோய்! பரஞ்சுடரே
திருவிளக்கே! பணிகின் றோமே!

இளமுருகன் தமிழ் முடங்கல்

முடங்கல் 2

"மா. கு"

அன்பினில் விளைந்த ஆரமுதே,

நல்லேன்; நலநிலை அறிய வேண்டுவல். உயிர்ச்செல்வன் நின் உய்வுறை மதியழகன் முழுநலமும் பெற்றுப் பொலிகின்றார். நல்லுணர்ச்சிச் சுடர்விரித்து, அருள்விளக்கஞ் செய்தொளிர்ந்து, தண்ணென்று வாழ்வதுதானே குளிர் மதியத்தின் இயல்பு! அன்னாரை முடங்கல் விடுக்கத் தூண்ட வேண்டுகிறீர். அது தூண்டா மணி விளக்கு. யானோ தூண்டுபவன்!

எளியேங்கள் நலமுணரக் கட்டுமீறிய ஆவல் கொள்கின்றீர். தங்கள் மடல் விரித்ததும் "நலமா?" என்ற நன்மொழிகள் புன்முறுவல் செய்கின்றன. அந்த மூவெழுத்துச் சொல், உட்பொதிந்த ஆர்வத்தை உளங்கிளர் உணர்ச்சியை நெஞ்சத்தின் நல்எழுச்சியை அருமையாகப் படம் பிடிக்கிறது. தங்கள் அன்புள்ளத்தின் செவ்வியுஞ் சொற்கூட்டத்தின் செழுமையும் ஒழுகலாற்றின் விருப்பமும் எவ்வளவு மன உருக்கத்தை உண்டு பண்ணுவனவாயிருக்கின்றன!

செல்வரே, நலந்தான். நலத்திற்கென்ன குறை? வாழ்க்கைப் பண்ணையை வளப்படுத்த நீங்களுண்டு. இளமழை முழக்கஞ் செய்ய மதியழகருண்டு. "வீறுடு விளைகெனத் தொழுது வித்துதற்கு" மணிவண்ணனாருமுண்டு. பின் யாண்டிருந்து புகும் நலக்குறை?

உள்ளூறை உயர்வே,

உணர்வு வெள்ளத்தில் மலர்ந்த தங்கள் நறுமலர்களை வாரி எடுத்துக்கொண்டேன்; தாங்கள் தொடுத்தனுப்பிய தெள்ளுரைத் தொடலைகளை எல்லாம் நிரலே அணிந்தணிந்து மகிழ்வு கொண்டேன். தங்கள் தேனூறு தீஞ்சொற்களை நாவூற ஊறச் சுவைத்து மகிழ்ந்தேன். வேறென்ன சொல்ல?

தங்கள் முடங்கல்கள் உடைந்த உள்ளத்தை அப்படியே உருவகித்து விட்டன; தங்கள் பேனாமுனை சென்ற காலத்தை

அழைத்து வந்து விட்டது; தங்கள் சொல்லமுது நல்விருந்து படைத்துவிட்டது. விருந்துண்ட களிப்பு உள்ளத்தில் துளும்பு நலம் விளைக்காதோ?

தெளிந்த கருத்துக்கள் உதிர்ந்த மலர்கள் ஒத்து அங்கு மிங்கும் நகைக்கூட்டஞ் செய்தன. அப் புன்னகைப் பூந்தோட்டத்தில் புகுந்துவிட்டேன். இளந் தென்றல் வீசிற்று என்று சொல்லவும் வேண்டுமா?

"வறண்ட பாலை"யிலிருந்து (அலுவலகம்) மீண்டு வருவேன் மாலை நேரம். தங்கள் கடிதம் குளிர்ந்த நீருடன் காத்துக் கொண்டிருக்கும். மடமடவென்று முழுவதும் பருகிவிடுவேன். ஆ! தண்மை! நட்பு எதுதான் செய்யாது?

"தேனொடு பால் கலந்தற்றே" என்ற **பொய்யில் புலவன்** பொருளுரைக்கு இலக்கியமாகிய தங்கள் திருமுகங்களைக் கண்டேன். அமிழாத நலம் பொதுளும் பெருங் கருத்துச் செல்வங்கள் அம் முடங்கலூடு சுடரோடிக் கிடக்கக் கண்டேன். பிரிவாற்றாமைப் பெருங்கடலிற் சிக்கிட்ட உமது உள்ளங்கண்டேன். அக்காலை அது சொரிந்திட்ட அமுததாரை உண்டேன். மகிழ்ச்சியா இன்பமா துன்பமா எல்லா உணர்ச்சியுந் துய்த்தேன்.

உள்ளக் கமலத்தின் வெண்தோட்டில் அந் நறுமலர் பிலிற்றுங் கொழுந்தேன் துளிகளைப் பெய்து தாங்கள் தீட்டிய திருமுடங்கல் விழுமிய கருத்தொளிருஞ் செழுந்தமிழ்க் கருவூலமோ? தெள்ளொளி கான்றுளிவீசுந் திருமலரோ? நுண்பொருட் பெற்றிகள்பல அழகுற அரும்பித், தண்ணென மலர்ந்து, நிறைந்த தமிழ் மணங் காலும் புதுமலர்ப் பூஞ்சோலைகொலோ? இல்லை, கலை துளும்பும் பொலன்குடமோ?

தமிழ் ததும்புந் திருவுள்ளப் பெற்றியாய்,

மகிழ்பூத்த அம்முடங்கல் அருள்பூத்த "**சங்க இலக்கியம்**" என்னுந் தெள்ளொளித் தீந்தமிழ்நூலை உடன்கூட்டி வந்தது. கட்டமுதொத்த பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுஞ் சேர்ந்த அவ்விழுமிய செழுநூலில் தொட்ட தொட்ட இடமெல்லாஞ் செய்யதமிழ் நகை செய்கிறது; கலைஞாயிறு கதிர் வீசுகிறது; புலமை உள்ளம் கிழலாடுகிறது; செந்நாவீறு செழுநடம்

புரிகின்றது. நூல் முழுவதும் உணர்ச்சி வெள்ளம் ஊடோடிப் பாய்கிறது.

அச் சங்க இலக்கியத்தில் வளமை செறிந்த தமிழகம் காட்சி யளிக்கிறது; தோலா நாவின் மேலோர் பேரவை ஒளி வீசு கிறது; "குடிப் பிறப்புடுத்துப் பனுவல் சூடி விழுப்பே ரொழுக் கம் பூண்டு" விளங்கிய பழந்தமிழர் இதயஒலி சிறுபறை முழங்குகிறது; அவர்கள் வைகிய நடுவுநிலை நெடுநகர் இடை யிடையே தோற்றஞ் செய்கிறது.

அவ்விலக்கியத்தின் ஒரு பாங்கர், வான்றோய் நல்லிசைச் சான்றோரான பழந்தமிழ்ப் புலவர்தம் பெருமிதம் நிழலாடும். ஒருபாங்கர், "பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லைக்குக் கறங்கு மணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த" பெரு வள்ளல் களின் பண்புநலம் பாவிசைக்கும். மற்றொரு பாங்கர், "ஒளிறு வாள் அருஞ்சம முருக்கிக் களிறெறிந்து பெயர்தலே" கடனாகக் கொண்ட வீர இளங்காளைகளின் வாழ்க்கை முரசம் வீறு செய் யும். இன்னொரு பாங்கர், "மேனாள் உற்ற செரு"வில் தன் முன்னோனையும், "நெருநல் உற்ற செரு"வில் தன் கொழுநனையும் இழந்த ஒரு தமிழன்னை அந்நாட் போர்க்குத் தன் ஒரு மகனைச் செருமுக நோக்கிச் செல்கென விடுக்குந் தமிழ்வீரம் நடமாடும்.

சங்க இலக்கியம் உண்ண உண்ணத் தெவிட்டாத தெள் ளமுதம்; எடுக்க எடுக்கக் குறையாத கலையீட்டம்; தொட் டனைத்து ஊறு மணற்கேணி; கற்றனைத்து ஊறும் அறிவூற்று; அது எய்ப்பில் வைப்பாகத் தமிழர் வைத்துப் போற்றுஞ் செழுஞ்செல்வம்; தமிழர்க்கு ஓர் உரையாணி; நல்லறிவுப் பூங்கா.

* "தமிழர்க்குச் சங்கத் தமிழினும் விழுநிதி வேறில்லை. அதன் தமிழெழில் வேறெதனானும் பெறப்படாது. ஒவ்வொரு மொழியும் பேரொளிச் சுரங்கம். அதனை ஆராய்ந்து மணிகண் டெடுக்குந் தமிழறிவு தவவறிவு. அவ்வருந் தவத்திற் றமிழர் பலருந் திரள்திரளாய்த் திரண்டு முயன்றால், வேண்டிய வேண்டி யாங் கெய்தலாம்."

* "சங்கநூற் கட்டுரைகள்" பதிப்புரை.

பிறர்நலம் பேணும் பிறவிக் குணக்குன்றே,

வறண்ட வாழ்க்கையின் இருண்ட பாதையில் தன்னந் தனியனாய், எளியனாய், மெல்ல நடந்து, வாழ்க்கைப் பள்ளங் களையும் பிணியுழந்த வழிகளையுங் கடந்து செல்லுங்காலையில் வழித்துன்பம் மாற்றுவோர் பலராவர்; தலையாயவர் நீர்.

யாண்டு நோக்கினுஞ் செங்கதிர்ச் செல்வனின் வெங்கதி ராற் காய்ந்து அள்ளுந் தணல் எழுப்பும் மணல் பரவிய பாலை யில் ஊற்றுநீர் நீர்.

கள்ளங் கபடின்றித் தூய உள்ளம் உடையீர்,

நட்புக் கனியமுதே, நங் குழந்தைப் பருவத்தில் எவ்வளவு இன்பமாக நாம் இருந்தோம். வெடிபடச் சிரிப்போமே, குறு குறு நடப்போமே, மதலை மொழிவோமே, மகிழ்ந்து வாழ் வோமே, அவ் வாழ்வெல்லாம் யாண்டுப் போய் ஒளிந்தன.

இளந்தைப் பொழுதில்தான் என்ன? தென்னங்காற்று, பொன்னூசல் ஆடிற்றே நம் வாழ்க்கை வளத்தோட்டத்தில்! கொள்ளாத மகிழ்ச்சி ததும்பிற்றே நம் உள்ளங்களில்! பள்ளி யில் தன்னந் தனியராய் இன்முகத்தோடு உறவாடுவமே, மனங் கலந்து பேசுவமே, ஆ! அது இழந்து எத்துணை நாட்கள் ஆயின!

அப்போதெல்லாம் நம் உள்ளங்களில் இன்னதென்றறியாத ஒளியொன்று சுடரோடிக் கிடக்குமே, அதுவும்போய் மாண் டொழிந்ததோ?.

அன்பு அமர் அகமே, இனி உம்மைக் காணாது காணு வேன். நெடுந்தொலைதான் கடந்தீர். ஆனால் அன்பு மனம் அதனையுங் கடக்கும். நட்பு எனும் நளிகடல்முன் தொலைவும் பிரிவும் என்செய்யும்?

என்னென்று எடுத்துரைக்க இயலா என்னன்ப,

காலத்தை என் செய்கின்றனை? கொல்கின்றேன் என்று சொல்கின்றனை. நன்று: எவ்வாறு கொல்கின்றாய்? கலைக் கோயிலைச் சுற்றியா? தமிழ்த் தென்றலிற் படிந்தா? வாழ்க் கைப் பாடங்களைப் பயின்றா? விடை வேண்டும்.

கலன்பெய் பேழையன்ன **சிலப்பதிகாரத்தின்** துளும்பு நலங்களை அதிற் பொதிந்தொளிருங் கருத்தமுதங்களை நுகர்ந்து

வருகின்றீர்களா? சிலம்புநூற் கருவூலத்தில் தாங்கள் காணும் பொன்னையும் பொருளையுஞ் சிறிது சிறிதாகவேனும் தங்கள் முடங்கல்கள் வழியாக எனக் களிக்கக்கூடாதா? "முழுதும் பழுதற்ற முத்தமிழின் பாடலை" என்னோடும் உடன்உண்ணக் கூடாதா?

திருவள்ளுவர் குறள் தங்கள்பால் இருக்கலாமே! நாளுக்குச் சில குறள்கள்—ஒரு நாளைக்கோர் அதிகாரமேனும் மனப் பாடஞ் செய்யலாமே! அது வாழ்க்கைக் கட்டிடத்திற்குச் சிறந்த அடிப்படையாகத் திகழுமே!

வாழ்க்கையை வடித்தெடுத்து அணிபெறத் தொகுத்தளித்த "வான்சுவை அமிர்த வெள்ளந்"தானே திருக்குறள். "திருவள்ளுவர் உலகையே திருக்குறளாக எழுதினர். உலகின் எழுத்தோவியந் திருக்குறள் என்று கூறலாம்" என்பர் ஆசிரியர் திரு. வி. க. "திருவள்ளுவர் உலகுக்கென்றே பயின்றார். உலகுக்கென்றே வாழ்ந்தார். அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகமாயினர் உலகம் அவராயிற்று" என்று மேலுந் தெருட்டித் தெளிவுரை பகர்வர் அவ்வாசிரியர்.

"திருவள்ளுவரின் அறத்தில் நின்று பொருளில் புதைந்து, இன்பத்தில் இயைந்து" அவர்தம் உள்ளத்தைப் புலனுழுது காண்க. கண்டு திளைத்துக்கொண்டே இருக்க. அதற்குள் என்னுடைய மறுமுடங்கலை அனுப்புவேன்.

தங்கள் செழிப்பு வேண்டும்,
இளமுருகன்.

"நிற்பது கூடாது"

[வித்வான் மு. வரதராசனார், B.O.L.]

யான் ஆறும் வகுப்பில் கற்றபோது எனக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தவர் கணக்கு ஆசிரியர். அவர் தமிழ் கற்றுத் தேர்ந்தவர் அல்லர்; வடமொழியைப் பாடமாகக் கொண்டு தேர்ந்து கணக்கு ஆசிரியராக வந்தவர்; ஆயினும், தமிழ் வகுப்பு அவரைத் தமிழ் கற்கத் தூண்டியது. அவர் நடத்திய வகுப்பில் இலக்கணப்பகுதி வரும்போதெல்லாம் மாணவர்க்குப் பேரச்சம். 'இலக்கணக் கேள்விகளுக்கு நன்றாக விடை எழுதுவோர்க்கு நல்ல மார்க்குத் தருவேன். அப்படித்தான் வரதராசன் என்னிடம் 60, 65 என மார்க்கு வாங்குகிறான்' என்று மற்ற மாணவரிடம் கூறுவார். ஆனால் யான் தவறு செய்யும் போதெல்லாம் தண்டனையும் இரட்டிப்பாகத் தருவது அவர் வழக்கம்.

ஒருநாள் 'எழுவாய் பயனிலை' வாக்கியங்கள் பலவற்றிற்கு எழுவாய் பயனிலை கூறிவந்தனர் மாணவர். எனக்கு முன் நான்காம் வரிசையில் உள்ள மாணவனுக்கு முறை வந்தது. 'அவனால் மணலைக் கயிறாகத் திரிக்க முடியாது' என்பது அவனுக்குக் கொடுத்த வாக்கியம். 'அவனால்—எழுவாய்' என்றான் அவன். 'மணலை—எழுவாய்' என்றான் அடுத்தவன். 'கயிறாக' என்றான் மற்றொருவன். 'திரிக்க—எழுவாய்' என்றேன் யான். எல்லோருக்கும் பிரம்பால் ஒவ்வோர் அடி கிடைத்தது. எனக்குமட்டும் அன்று மூன்று அடி. 'கண்ணை மூடிக்கொண்டு அந்த வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் எழுவாய் எழுவாய் என்கிறீர்களா' என்று சினந்தார் ஆசிரியர். 'நீயும் அவர்களைப்போல ஆகிவிட்டாய்' என்று வெகுண்டார் என்னை. 'அவன் என்பது தோன்றா எழுவாய்' என்று அவரே விடை கூறினார்.

யான் கண்ணை மூடிக்கொண்டு சொல்லவில்லை. ஆசிரியர் கற்பித்த முறையே சென்றுதான் எழுவாய் கண்டேன். முதலில்

பயனிலை காணவேண்டும் என்றும், அது பெற்ற பிறகு, எவர், எது முதலிய கேள்விகளை எழுப்பி விடையாக வருவது எழுவா யாகக் கொள்ளவேண்டும் என்றும் அந்த ஆசிரியரே எனக் குக் கற்பித்திருந்தார்.

'முடியாது' பயனிலை என்று கண்டேன். எது முடியாது என்று கேட்டேன். திரிக்க முடியாது என்று விடை வந்தது. திரிக்க—எழுவாய் என்று கூறினேன்; மூன்று அடி பெற் றேன். ஆசிரியர்பால் எனக்குச் சிறிதும் வெறுப்பு இல்லை. அவர் 60, 65 என உயர்ந்த மார்க்கும், தவறியபோது இரட் டிப்புத் தண்டனையும் கொடுத்த கொடையே என்னை இன்று தமிழ்க்கடலுள் திளைக்கச் செய்துள்ளது என் நினைந்து நன்றி யுடையேனாகும்போது என் உள்ளம் குளிர்கின்றது.

அவன்—எழுவாய் என ஆசிரியர் சொன்ன விடை என் உள்ளத்தில் பதியவில்லை.

பதின்மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் அதே உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் தொழில் பெற்றேன். பத்தாம் வகுப்பு வரை தமிழ் கற்பிக்கும் உரிமை பெற்றேன். எனக்கு எழுவாய் பயனிலை கற்பித்த ஆசிரியரோ, அன்றும் அந்நிலையில் இருக்கக் கண்டேன். என் ஆசிரியர் என்னை நண்பனாகக் கொண்டார். யான் அன்றும் இன்றும் ஆசிரியராகவே அவரை மதித்து வரு கின்றேன்.

எழுவாய் பயனிலை கற்பிக்கும் வாய்ப்பு எனக்கு ஒருநாள் வாய்த்தது. 'அவருடைய புகழை எவராலும் சொல்ல முடி யாது' என்பது வாக்கியம். மாணவரைக் கேட்டேன். வெவ் வேறு வகையான விடைகள் வந்தன. எல்லாம் தவறே. 'முடி யாது—எது' என்று கேள்வி கேட்குமாறு வழிகாட்டினேன். அப்போதும் பலரும் திகைத்தனர். ஒருவன் எழுந்து 'சொல்லு வது—எழுவாய்' என்றான். 'வாக்கியத்தில் இல்லையே' என் றேன். மற்றொருவன் தோன்றா எழுவாய் என்றான். 'தோன்றா எழுவாயினைச் சேர்த்துப் படித்தால் வாக்கியம் நிரம்பவேண் டும்; இது மிகையாகின்றது. ஆகையால் தோன்றா எழுவாய் ஆகாது. சொல்ல என்பதை எழுவாயாகக் கொள்ள வேண் டும்' என்று கற்பித்தேன். இன்னொரு மாணவன் எழுந்தான்.

'நேற்று சொல்ல—வினையெச்சம் என்று சொல்லிக் கொடுத்தீர்கள்' என்றான். மற்றொருவன் எழுந்து ஏதோ கேட்க முயன்று வாளா அமர்ந்தான். இன்னொருவன், 'பெயர்ச்சொல் தானே எழுவாயாக வரும்; வினையெச்சம் எழுவாயாகுமா?' என்று கேட்டான்.

மாணவர் மூளையை எண்ணி வியந்தேன். இதுபோன்ற வாக்கியம் என் ஆறும் வகுப்புக் கல்வி முதற்கொண்டே, என் உள்ளத்தைக் கலக்கித் தெளிவித்திருப்பதால், அன்று மாணவர் உள்ளம் கொள்ளுமாறு விளக்க முடிந்தது.

என் உயர்நிலைப்பள்ளிக் கல்வி முடிந்த பின்பு, **திரு. வி. கலியாணசுந்தரனார்** உரைநடை கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. "தீண்டாமைப் பேய் இந்நாட்டினின்றும் ஒழிதல் வேண்டும்; சாதிவேற்றுமை என்னும் தொத்துநோய் தொலைதல் வேண்டும்; பெண்ணடிமை ஒழிந்து பண்டைத் தமிழ் நாட்டிற்போல் பெண்ணுரிமை ஓங்கல் வேண்டும்" என்பன போன்ற வாக்கியங்கள் என் நினைவில் பதிந்தன. ஒழிய வேண்டும், தொலைய வேண்டும், ஓங்க வேண்டும் என்று பிறர் எழுதும் இடங்களில் ஒழிதல் வேண்டும், தொலைதல் வேண்டும், ஓங்கல் வேண்டும் என்று திரு. வி. க. எழுதுவதைக் கூர்ந்து ஆய்ந்தேன். **வினையெச்சம்** என்று யான் கருதியவற்றை அவர் **தொழிற்பெயராக** எழுதியிருத்தல் கண்டேன். பின்னர் **மறைமலையடிகளார்** எழுதிய நூல்களைக் கற்றேன்; உண்மை மேலும் விளங்கிற்று. திருக்குறள் — **பரிமேலழகர்** உரை கற்றேன்; உண்மை தெளிவாயிற்று. மறந்தும் மேற்குறித்த வினையெச்ச வாய்பாட்டால் எழுதாத பரிமேலழகர் உரைநடையினை துருவித் துருவி ஆராய்ந்தேன். **சங்க இலக்கியங்களைக்** கற்கும் வாய்ப்பு, பின்னர் வித்வான் தேர்வுக்குரிய கல்வியால் ஏற்பட்டது. ஐயங்கள் அனைத்தும் பறந்தொழிந்தன.

ஆதலின், மாணவரிடம் 'சொல்ல' என்பது தொழிற்பெயர் என்றும் 'சொல்லல்' என்பதன் ஈறு சிதைந்தது என்றும், பாண்டியநாடு என்பது பாண்டிநாடு என்றானாற்போல் சொல்லல் வேண்டும் என்பது சொல்லவேண்டும் என்றாதல் மரூஉ எனக் கொளற்பாற்று என்றும் விளக்கினேன்.

இஃது எவ்வாறோ உடனுள்ள தமிழாசிரியர் மற்றொருவர் செவிக்கு எட்டியது. மறுநாள் காலையில் பள்ளியுள் நுழையும் போது, சொற்பொழிவு ஒன்று கேட்டது. "இந்தக் காலத்தில் இலக்கணம் என்றால் என்ன என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்களோ, தெரியவில்லை. ஒரு விதியை மாற்றுவார்களானால் தமிழ் அடியோடு போயிற்று என்பதை உணரவில்லை. மனம் போன போக்கெல்லாம் இலக்கணமாம் 'சொல்ல' என்பது ஒரு வாக்கியத்துக்கு எழுவாயாம். இவர்கள் எல்லாம் வித்வான்களாம். வித்வான் பட்டம் வந்த அன்றைக்கே கெட்டது தமிழ். இந்தப் பல்கலைக் கழகத்தார்தாம் வித்வான் பரீட்சை ஏற்படுத்தித் தமிழைக் குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள்" என்று சொற்பொழிவு நீண்டுகொண்டேயிருந்தது. என் தலை கண்டதும் சொற்பொழிவு குறுகிவிட்டது. அத் தமிழாசிரியர் என் நண்பரே. ஆயினும் தமிழின்மேல் கொண்டுள்ள பற்றே அவரை அந்தச் சொற்பொழிவு ஆற்றத் தூண்டியது.

நண்பருடன் உள்ளம் கலந்து பேசமுடிந்தது. ஆனால் உண்மையை விளக்க முடியவில்லை. என் குறைபோலும்! அவர் என் கருத்து வேறுபாட்டிற்கு இடந்தர மறுத்துவிட்டார்.

மொழியியல் (Philology) என்பது மேனாட்டவர் சென்ற நூற்றாண்டில் வளர்க்கத் தலைபட்டதோர் உயர்ந்த அறிவியல் துறை. அத் துறையில் யான் முதன்முதலாகக் கேட்டுக் கண்டு கற்றநூல் கால்டுவெல் பெரியார் எழுதிய ஒப்பிலக்கணமாகும். அது மேலும் பல நூல்களைக் கற்கத் தூண்டியது. அவற்றுள், 'ஆறு மொழிகளில் சொற்றொடரிலக்கணம்' (Syntax in six Languages - By F. M. Purdic M.A.) என்பதொன்று. அதனுள், தொழிற்பெயர் நிலையில் உள்ள சொல் எச்ச வடிவிற்கு மாறுவதைப் பற்றிய ஆராய்ச்சி உள்ளது. தொழிற்பெயர் அவ்வாறு எச்சமாக மாறுதல் லத்தீன் மொழியில் காணப்படுகின்றது என்றும், ஜெர்மனி மொழியிலும் அஃது உள்ளது என்றும், பிரஞ்சு மொழியில் அது வினையெச்சமாக மாறிய பின்னும் எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் அமைதல் உண்டு என்றும், ஆங்கிலத்தில் அந்தப் பெயர்ச்சொல் ஈறு கெட்டு உருபு ஏற்கின்றது என்றும் ஆராய்ந்து எழுதியுள்ளார்.

தமிழிலும் ஆங்கிலத்திற் போல, அந்தச் சொல் உருபேற்றல் உண்டு.

மணலைக் கயிருகத் திரிக்க முடியாது
மணலைக் கயிருகத் திரிக்கிறதற்கு முடியாது

என்னும் இரண்டும் பேச்சு வழக்கில் உண்டு. திரித்தல் திரிக்கல் திரிக்கிறது என்னும் மூன்றும் தொழிற்பெயர். முதல் சொல் எழுத்து வழக்கில் உள்ளது. இரண்டாம் சொல் மேற்கூறியவாறு சிதைந்து பேச்சு வழக்கில் உள்ளது. மூன்ருஞ் சொல் காலங் காட்டும் தொழிற்பெயர். அது நான்கனுருபு ஏற்று மேற்கூறியவாறு வழங்குகின்றது. இந்த மூன்றனுக்கும் உள்ள தொடர்பை உன்னின், எழுவாய்—பயனிலை வகுப்பில் வந்த மயக்கம் தெளியுமன்ருே?

'திரிக்கிறதற்கு முடியாது' என்பதில் தொழிற்பெயர் நிகழ் காலம் காட்டுவது. 'திரிப்பதற்கு முடியாது' என்பதில் தொழிற் பெயர் எதிர்காலம் காட்டுவது; ஆயினும் காலம் குறியாது பொதுவாக வழங்குவது.

ஒருநாள் சென்னை டிராம் வண்டி ஒன்றில், சுற்றிலும் எழுதப்பட்டுள்ளவற்றைப் பார்த்து வந்தேன். 'நிற்பது கூடாது' என்ற தொடர் தெரிந்தது. மற்ற எழுத்துக்கள் நெடியார் ஒருவர் தலையால் மறைந்திருந்தன. அவர் திரும்பி அசைந்தார். பிரயாணிகள் டிரைவர் பிளாட்பாரத்தில் நிற்பது கூடாது என்று முழுமையும் தெரிந்தது. சிறிது தயங்கினேன். Passengers are forbidden to stand on the driver's platform என்று ஆங்கில வாக்கியம் உடனிருந்ததைக் கண்டேன்; தெளிந்தேன். மேற்கூறிய இலக்கண நினைவுகள் எல்லாம் வந்தன.

மொழிபெயர்ப்பு அழகிதே. சுருங்கச்சொல்லல் என்பதே அந்த அழகு. அன்றியும், 'Spit here' என்பதற்குத் 'துப்பு இங்கே' என்று எழுதியது போன்ற சொற்பெயர்ப்பு இராமல் மொழிபெயர்ப்பாகவே அமைந்துள்ளது அறிந்து மகிழ்ந்தேன். You are requested to attend the meeting என்பதற்கு 'கூட்டத்திற்கு வருமாறு நீங்கள்' வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்' என்று மொழிபெயர்க்கும் நண்பர் டிராம்வே கம்பெனி

யார்க்குக் கிடைத்திருந்தால் வேறுவகைப் புதுமை காணக் கிடைத்திருக்கும்.

'நிற்கக்கூடாது' என்று பேச்சு வழக்கில் உள்ள ஒன்றை 'நிற்பது கூடாது' என்று தொழிற்பெயர் வாய்பாட்டால் எழுதியவர் போற்றத் தக்கவரே. முன்னது எளியது என்பதும் பின்னது அரியது என்பதும் உண்மையே. ஆயினும், 'நிற்க என்னும் பேச்சுச் சொல்லை 'நிற்பது' என்று திருத்திய அவர் நோக்கம்தான் யாதோ? யாதாயினும் ஆகுக. அவர் 'வினையெச்சம் எழுவாயாகுமா' என்றும், 'தொழிற்பெயர் இவ்வாறு சிதைந்ததோ' என்றும் ஐயுறும் இலக்கணக்கல்வி பெற்றிலராயினும் ஆகுக. இவ்வாறு எழுதிய அவர் மூளை தமிழ் வடிவினது, அவர் தாய்மொழி தமிழ் என்று துணிந்து கூறலாம்.

"இறை, உயிர், கட்டு என்னும் முப்பொருள்களுள், காளத்தியப்பரும் கண்ணப்பரும் இறையும் பக்குவ முதிர்ந்த உயிருமாம்... கட்டாகிய ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என்னும் ஐவகைப்படும் பாசங்களின் இயல்புகளை முறையே நாகன், தந்தை, காடன், நாணன், தேவராட்டி என்னும் இவர்கள் செயல்கள் புலப்படுத்துவன...திருக்காளத்தி மலைமிசை ஏறியது, தத்துவங் கடத்தலைப் புலப்படுத்தும்."

—மகாமகோபாத்தியாய பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார்.

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

எ. அழுகைக் குரல்

காணாமற்போன குதிரையைக் கண்டுபிடித்தல் என்னும் ஒரே குறிக்கோளுடன் புறப்பட்ட புதிய வேடன் முதலில் கழனியூரைச் சுற்றிலும் ஒருமுறை தேடிவிட்டுத் தன் குதிரையை வடக்கு நோக்கிச் செல்லும் பெரிய சாலை வழியாகச் செலுத்தினான். அவனுடைய பார்வை சாலையின் நாலா பக்கங்களிலும் கூர்ந்து சென்றது.

“அதோ! குதிரை!...ஓடு! பிடி!” என்று அவன் மனமானது கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது போலிருக்கும்! உடனே அந்த இடத்தை நோக்கித் தன் குதிரையை ஓட்டுவான்! ஐயோ! காண்பது குதிரையன்று! ஈவிரக்க மற்றுக் குத்துக்கல்லாக நிற்கும் பாறையைப் பார்த்துவிட்டு ஏமாந்து திரும்புவான்! இவ்வாறு பொய்த்தோற்றம் பூண்டு இயற்கைப் பொருள்களெல்லாம் வேடனை ஏமாற்றி நகைப்பது அவனுக்கு மனச்சலிப்பை உண்டாக்கி விடும்!

உடனே, “முரட்டுக் குதிரை!...போனால் போகட்டும்! இனிமேல் நான் அதைத் தேடப் போவதில்லை...” என்று மனம் நொந்து எண்ணுவான்!

“குதிரையைத் தேடிக் கண்டுபிடிக்காமல் திரும்பினால் புலவர் என்ன எண்ணிக் கொள்வார்? தன் குதிரையைத் தேடுவதில் எனக்குக் கருத்தில்லை என்று இகழமாட்டாரா?” என்ற தயக்கம் அடுத்த நொடியில் கிளம்பும்.

“சரி! என்ன ஆனாலும் குதிரையைக் கண்டு பிடிக்காமல் புலவரின் கண்முன் நிற்கப்போவதில்லை!...” என்று முடிவு கட்டுவான்!

இவ்வாறு வேடன் பலவகையான எண்ணமிட்டுக் கொண்டே வெகு தூரம் வந்துவிட்டான்! குதிரை அகப்பட்டபாடில்லை! எத்தனையோ ஒற்றையடிப் பாதை, பொற்றையடிச் சாரல், காட்டுப்புதர் ஓரம், குன்றோரக் குகை, இவற்றிலெல்லாம் குதிரையைத் தேடிக் கல்லிலும் முள்ளிலும் தன் குதிரைமீது தடுமாறி அலைந்து பார்த்துவிட்டான்! தேடுவது கிடைத்தால் தானே?

இன்னும் கொஞ்ச தூரம் சென்றவுடன், வேடன் பயணம் செய்து கொண்டிருந்த சாலை இரு கிளைகளாகப் பிரிந்தது? குதிரை இடது கிளை வழியே போயிருக்குமா? அல்லது வலது கிளைப்பாதையூடே சென்றிருக்குமா? இத்தகைய புதிய தத்தளிப்பு வேடனின் மனதை அலைத்தது. சாலைகள் பிரியும் இடத்திலேயே வெகு நேரம் நின்று ஆலோசனை செய்து கொண்டிருந்தான்! பின் ஒருவகை முடிவுக்கு வந்து வலது கிளைப்பாதை வழியாகத் தன் குதிரையை ஓட்டினான்.

புதிய சாலையின் வழியாகப் போகும்போது நடுப்பகல் ஆய்விட்டது. வெயில் மண்டையைப் பிளப்பதுபோ லிருந்தது. சாலையின் இருமருங்கிலும் சிறுசிறு மரங்களடங்கிய சமவெளி தென்பட்டது. சமவெளியினூடே வடமேற்கு நோக்கி வளைந்து வளைந்து ஓர் ஒற்றையடிப் பாதை சென்றது. அப் பாதையில் இறங்கி வேடன் தன் குதிரையைச் செலுத்தினான்.

போகப் போக, ஒரு பெரிய மலைக்குகை நெருங்கிக்கொண்டே வந்தது. சற்று நேரத்தில் வேடன் குகையருகில் வந்துவிட்டான். வெளியில் குதிரையை நிறுத்திவிட்டு அவன் குகைவாயிலை அணுகும்போது யாரோ பெருமூச்சுவிட்டு அழுகின்ற குரல் கேட்டது. குரலில் பின்னியிருந்த மென்மை அது ஒரு பெண்ணின் குரல் என்பதை அறிவித்தது. துயர்க்கடலில் மூழ்கியுள்ள ஒரு பெண்ணின் அழுகைக்குரல் என்பதை வேடன் உணர்ந்து கொண்டான்.

முன்பின் தெரியாத புதிய குகைக்குள் திடீரென நுழைவதற்கு முதலில் துணிவுகொள்ளவில்லையாயினும், பின்னர் மன உறுதியுடன் அடிமேல் அடிவைத்து வேடன் மெதுவாகக் குகைக்குள் நுழைந்தான். ஒரே இருள்மயமா யிருந்தது! மனத்தளர்ச்சி யடையாமல் உள்ளே செல்லச் செல்ல அழுகைக்குரல் மிகத் தெளிவாகக் கேட்டது. ஆயினும் குகை பெரிதாக இருந்தமையால் இருட்டில் வழி தெரியவில்லை.

எனவே வேடன் குகையைவிட்டு வெளியேவந்து தன் குதிரையின் கழுத்தில் அணிந்திருந்த நவமணி மாலையைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு திரும்பவும் குகைக்குள் நுழைந்தான். நவமணியின் ஒளி குகையிருளைச் சற்று விலக்கியது. இந்த இயற்கை விளக்கின் துணையால் குகைக்குள் வளைந்து செல்லும் பாதை வழியே விரைவாகப் புகுந்தான்.

குகை யிருளைத் திடீரென விலக்கி ஒளிகாட்டும் காட்சியைக் கண்டு திடுக்கிட்டெழுந்து ஒரு பெண்மணி பதற்றத்துடன் 'ஓ' வென்று அலறினாள்! வேடன் கேட்ட அழுகைக்குரல் இந்தப் பெண்மணியால் எழுப்பப்பட்டதே என்பதை அவன் உணர்ந்து கொண்டான். அலறி எழுந்த பெண்ணை நோக்கி,

"அம்மா!...பதறாதே!..." என்று சாந்தமான குரலில் பேசினான் வேடன்!

"புயலுக்குப் பின் அமைதி! துன்பத்திற்குப் பின் இன்பம்! ஆம்! கொடுஞ்செயலும், கடுஞ்சொல்லுமே கொஞ்ச நாளாகக் கண்டு கேட்டுள்ள நான் இன்று கேட்கும் இந்த இனிமைச்சொல் உண்மைப் பேச்சு தானா? அல்லது இதெல்லாம் கனவா?..." என்று மனதிற்குள் எண்ணித் திகைத்தாள் அம் மங்கை.

மீண்டும் வேடன், "பெண்ணே! நீ யார்? இங்கு எப்படி வந்தாய்?..." என்று அன்பாக வினவியதும்; மங்கையின் விம்மலும் பெருமூச்சும் தம்மை மீறிக்கொண்டு மிருந்தன! அவற்றை அடக்க முடியாதவளாய் அவள் 'ஓ'வென்று மீண்டும் கதறிவிட்டாள்.

வேடனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை! இரக்கம் ஒரு புறம், துணிவு ஒருபுறம்; திகைப்பு ஒருபுறம்; அச்சம் ஒருபுறம்; இங்ஙனம் மாறிமாறிச் சிந்தனை அலைகள் அவன் உள்ளத்தில் மோதிக்கொண்டிருந்தன.

"அழாதே!...அம்மா! நீ என் பதறுகிறாய்?...பயப்படாதே!..." என்று வேடன் திரும்பவும் பரிவாகக் கூறியதும், அந்தப் பெண்ணின் உள்ளத்தை மூடியிருந்த அச்சம் என்னும் திரை சற்று விலகியது.

"ஐயா! நீங்கள் யார்?...இப்படிக் கனிவான பேச்சைக்கேட்டு...... ஒரு வாரம் ஆய்விட்டதே!...அன்புக்குரல் கொடுக்கும் தாங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?..." என்று ஏங்கிக்கொண்டே கேட்டாள் அம் மாதரசி.

"அம்மா!...அதைப்பற்றி யெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம்!... முதலில் நாமிருவரும் குகைக்கு வெளியே போகலாம்...வா!" என்றான் வேடன்.

தூக்க மேலீட்டால் தள்ளாடிக்கொண்டு அந்தப் பெண்மணி மெதுவாக வேடனைத் தொடர்ந்து குகைக்கு வெளியே வந்தாள்!

இப்பொழுதுதான் வேடன் அவளை நன்றாகப் பார்க்க முடிந்தது. பெண்மணியும் நாணத்துடன் குனிந்துகொண்டே கடைக்கண்ணால் மெதுவாகப் பார்த்துவிட்டுச் சட்டெனத் திரும்பவும் தரையை நோக்கினாள்.

அப் பெண் தலைவிரி கோலமாயிருந்தாலும் வேடனுக்கு அதுவும் ஒரு அழகாகத்தானிருந்தது. உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஒரு பொட்டு நகைகூடக் கிடையாது. பொன்னிறமான திருமேனியுடைய பெண்ணிற்குப் பொன் நகையும் வேண்டுமோ? ஒல்லியான மேனியுடைய இளமங்

கையின் உயரிய தோற்றமும் முகப்பொலிவும் பார்த்துப் பார்த்து மகிழக் கூடியனவாயிருந்தன.

அன்பு ததும்பும் அவளுடைய கருணைக் கண்களிலிருந்து மாலைமாலையாகக் கண்ணீர் வடிந்த காட்சி வேடனுக்கு ஓர் அன்பு மழை போன்றிருந்தது! விம்மி விம்மி அழுவதால் அசைகின்ற அவளுடைய சிவந்த உதடுகளைக் கண்டதும் அவை இன்னும் கொஞ்சம் அசையட்டும் என்று அவற்றின் அழகில் வேடன் சொக்கிப் போய் விட்டான். அவளுடைய அழுகைக் கண்ணீர் மழையானது தாமரைக் கைகளின்மேல் பொழிந்து அவற்றை அன்று பூத்த புதுப்பூக்கள் போன்று மலர்வித்தது!

இத்தகைய அழகு வாய்ந்த பெண்மணியை வேடன் பார்க்கும்போது அவள் வெட்கத்தால் தலைகுனிவதும், அவள் மெதுவாகக் கருவிழியை கண்ணோரத்தில் கொண்டுபோய் புதிய மனிதனை நோக்கும் பான்மையும்,

"யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்!"

என்னும் குறளுக்கேற்ற சித்திரமாக நின்றன!

தன்னைக் காப்பாற்ற வந்த புதிய ஆடவர் அழகுமிக்க இளங்காளையாக இருப்பதைக் குறிப்பாக அறிந்த மங்கையின் முகப்பொலிவு ஒளிபெற்று மலர்ந்தது. இந்த ஆணழகனைக் கண்டதும் அவள் உள்ளத்தில் ஒருவகை நல்உணர்ச்சியும் கிளர்ச்சியும் பொங்குவதை மறைக்க முடியவில்லை.

"ஐயா! மற்றதெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம். முதலில் இந்த இடத்தைவிட்டுப் போய்விடுவோம்!...இதைக் கண்டாலே எனக்கு ஒரு வகையான அச்சம் ஏற்படுகிறது!..." என்று தெளிவாகவும் இனிமையாகவும் கூறினாள் இளமங்கை!

"அம்மா!...இனி நீ அஞ்சவேண்டியதில்லை!—கவலைப்படாதே!... துன்பத்தில் வதங்கிய உன் முகம் இன்பத்தில் பூரிக்கும் வழியைத் தேடுவேன்!...வா, என்னுடன்!..." என்றான் வேடன்.

பின்னர் இருவரும் குதிரையின் அருகில் சென்றனர். குதிரை மீதிருந்த சேணத்தைக் கொஞ்சம் பின்னால் நகர்த்தித் தனக்கு முன்னால் அப் பெண்மணியைக் குதிரைமீது அமரச் செய்து மிகக் கவனமாகவும் மெதுவாகவும் குதிரையைச் செலுத்திக்கொண்டு தான் முன்பு வந்த ஒற்றையடிப்பாதை வழியே வேடன் திரும்பினான்.

(தொடரும்)

ப்ராமனர் என்னும் சொற்பொருள்

[வித்துவான் மா. இராசமாணிக்கம் B.O.L.]

'பிராமனர்' என்னும் சொல் வடமொழியினின்றும் தமிழ்ப்படுத்தப் பட்டதாகும். அதில் உள்ள 'அர்' விகுதி நீக்கப்பெறின், எஞ்சிய 'ப்ராமன்' என்பதே வடமொழி மூலச் சொல். இச் சொற்பொருள் காணவேண்டுமாயின், வடமொழி ஆராய்ச்சி வேண்டற்பாலது. அத்துடன் இந்தோ-ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியும் வேண்டற்பாலது. இவ்விரண்டையும் கொண்டு பார்ப்பதேன்? எனின், 'ஆரியர் இந்தியா, பாரசீகம், இட்டாலி, ஜெர்மனி முதலிய இடங்களிற் சென்று குடியேறிய வர் ஆதலின் அவர்கள் பேசிய வடமொழி, பாரசீகமொழி, லாட்டின், பழைய ஜெர்மன் ஆகிய மொழிகள் ஓரினத்தன ஆகும். ஆதலாற்றான் ஒப்பிலக்கண முறைப்படி இவற்றை நோக்குதல் வேண்டும். இங்ஙனம் நோக்குதலாலும் இப் பல திறப்பட்ட ஆரிய மக்கள் வரலாற்றை நன்கறிவதாலும் சில நுட்பமான செய்திகள் ஒருமைப்பட்டிருத்தல் அறியக்கூடும். இது நிற்க, 'பிராமன்' என்னும் சொல் லாட்டின், பெர்ஷியன் மொழிகளில் உள்ளதா? இருப்பின் அதன் பொருள் யாது? அது யாரைக் குறித்தது? என்னும் கடாக்கட்கு உற்ற விடைகளைக் காணல் சுவை பயப்பதாகும்.

பரெஸ்மன் (Baresman)—புற்கம்பிகளின் கட்டு, அல்லது, வேள்வி மேடையை மூடுதற்காகப் பரப்பப்பட்டதும் உயர்த்தப் பட்டதுமான தூய 'புற்கட்டு' அல்லது, வேள்விக்கென அமைக்கப்படும் 'புல் ஆசனம்.'

பரெசிஷ் (Barezish)—மெத்தெனும் ஆசனம் (cushion); இந்தியாவில் 'குசைப்புல்'; வேள்விக்களத்தில் விரிக்கப்படுவது; கடவுளர்க்கு ஆசனமாகப் போடுவது.

ப்ராமன் (Brahman)—ஆண்பாற்சொல்; யாகமேடையைத் தயாரிப்பவன் அல்லது யாகமேடையைப் புல் படலத்தான் மூடுபவன்.

ப்ரமன் (Brahman)—யாகம் (அஃறிணை, ஒன்றன்பால்). '**ப்ரமன்**' என்னும் சொல் முதலில் யாகமேடைக்கு அமைக்கப் படும் புல்லுக்காகி, யாகமேடைக்காகி, பின்னர் யாகத்துக்காகி, அதனைச் செய்யும் மனிதனுக்காகி வந்தது என்பது நன்கு அறியத்தகுவது. இங்ஙனம் ஒருசொல் மும்முறை பல்வேறு

பொருள்களைக் குறித்து வருதலை, 'மும்மடி ஆகுபெயர்' எனத் தமிழ் இலக்கணம் கூறும்.

இட்டாலி நாட்டில் பூசை முதலியன செய்தவன் 'ப்லாமென்' (flamen) எனப்பட்டான். இப் 'ப்லாமென்' என்பார் சிறு தொகையினரே; ஒரு குறிப்பிட்ட சாதியார் அல்லர்; இத் தொழிலும் பரம்பரைப் பாத்தியமுடையதன்று. நகர மக்களால் இறை வழிபாடு செய்ய இவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். ரோமாபுரியில் இருந்த முப்பது பண்டைக்குடிகள் (tribes) தத்தமக்கெனத் தனித்தனிப் 'ப்லாமென்' உடையராயிருந்தனர். இவரன்றித் தனித்தனிக் கடவுள் பூசை செய்வதற்கெனப் பதினைந்து 'ப்லாமென்' அமர்த்தப்பட்டிருந்தனர். இவருள் முதன்மையாக இருக்கத் தக்க மூவர்—ரோமாபுரியில் இருந்த இரண்டு உயரிய வருணங்களைச் சேர்ந்தவர் ஆவர். ["ரிக்வேத காலத்தில் இந்தியா வந்த ஆரியர்க்குள்ளும் **முதல் இரண்டு வகுப்பாரே யாகம் செய்து வந்தனர்** என்பது அறியத்தகுவது விஸ்வாமித்திரர், திரிசங்கு மன்னர் செய்த யாகத்துக்குப் புரோகிதராக இருந்தார். 'தேவபி' என்னும் க்ஷத்ரியர், சந்தனுவின் புரோகிதராக இருந்தார்."*] இம்மூவருள் தலைவனாக இருந்தவன் '**டியாலிஸ்**' (flamen Dialis) எனப்பட்டான். அவன் ஜூபிட்டர் (டியாலிஸ் பிதா) தேவனின் புரோகிதன். அவனே வேதகாலத்தில் '**டியாயஸ்** பிதா' (Dyaus pita) எனப்பட்ட கடவுளின் புரோகிதன்.† அவன், தன் மனைவி உயிரோடிருக்கும்வரைதான் புரோகிதனாக இருத்தல் வேண்டும். ஏனெனில் இருவரும் சேர்ந்து சில சடங்குகள் செய்ய வேண்டியிருந்தன. மனைவி இறப்பின்,

---

* 'நிருபேந்திர குமார் டட்' எழுதிய 'இந்திய ஜாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்'—புத். 1, பக். 39, 52-54.]

இங்ஙனமே, பாரசீகம் புக்க ஆரியருள்ளும் **முதல் மூன்று வருணங்கள் இருந்தன** என்பது 'அவெஸ்டா' (Avesta) என்னும் பாரசீகர் மத நூலால் அறியலாம். எனவே, இந்தியா முதலிய இடங்கட்கு வருமுன்னரே ஆரியர்க்குள் முதல் மூன்று வருணங்கள் பெயரளவில் (தொழில் அளவில்) ஏற்பட்டிருந்தன என்பது நன்கு புலனும். ஆரியர் இந்தியா வந்த பின்னர்த் தம்மினும் நிறம்-மொழி-நாகரிகம் இவற்றில் வேறுபட்ட மக்களைத் '**தாசர்**' எனவும், '**சூத்திரர்**' எனவும் கொண்டனர் என்பது அறியத் தக்கது."

† "வேதகாலத்துக்கு முற்பட்டதும் இந்திய-ஈரானிய ஆரியர் காலத்துக்கு முற்பட்டதுமான தேவர்கள் 'தியஸ்பிதா, திவொ பிதா' ஆவர். இவர்களே ரோமர்களால் 'ஜூபிட்டர், ஜியஸ் (zeus) எனப்பட்டவர்கள்" (Dr. R. Timmerman's article in 'Proceedings Transactions of the Third Oriental conference, Madras, 1924, p. 116).'

அவன் வேலையினின்றும் நீங்குதல் வேண்டும் என்பது விதி. 'ப்லாமென்' வேலை 'ப்லாமோனியம்' எனப்படும். இத்துடன் 'ப்ராமன்' வேலை 'ப்ராமனீயம்' எனப்படுதலை ஒப்பு நோக்கிச் சுவைக்க.

பாரசீக 'ப்ரெஸ்மன்' என்னும் 'புல் கதிர்க்கட்டு' பாரசீகப் புரோகிதனது இன்றியமையாத பொருளாக விளங்கினது போல—ரோமாபுரியில் 'பாஸிஸ்' (fasees) என்பன கோடரி கொண்டனவாய் நீதிபதிகள் முன்னும் 'ப்ராமன் டியாலிஸ்' என்னும் பிரதம குருமுன்னும் கொண்டு செல்லப்பட்டன. இவை குற்றவாளிகளைத் தண்டிக்கவல்லன; ஆனால் அவர்களைத் தூய்மைப்படுத்தும் கருவிகளாகவே கொண்டு செல்லப்பட்டன. அக்கால நீதிபதி அல்லது புரோகிதன் தெய்வீகத்தன்மையுடையவன்; தீயவரையும் தீய ஆவிகளையும் விரட்டுபவன் என நம்பப்பட்டான். அதனாற்றான் புரோகிதன் அதனைக் கையில் தாங்கி வருதல் வழக்கம். இஃதன்றி, ரோமாபுரியில் யாகத்திற்கு என்று இலைக்கொத்துகள், சில செடிகளின் இலைகள், முதலியன பயன்படுத்தப்பட்டன. இவை 'வெர்பேன' (Verbanae) எனப்பட்டன. [இப்பெயருடன் ரிக்வேதகாலத் 'தர்பை' என்னும் பெயரை (புல் - பெயர்) ஒப்பிடுக.] ரோமாபுரிப் புலவர் ஒருவர் புதிய புல்லாலும் வெர்பேனாலும் மேடையமைக்க விரும்புவதாகவும், பிறிதோரிடத்தில் 'வெர்பேனால் மேடை சுற்றி அமைக்கப்பட்டுப் பலியிட்ட ஆட்டிறைச்சி சிதறப்பட்டதாக இருத்தல் வேண்டும்' எனவும் கூறியுள்ளமை நோக்குக. வேறொரு லாட்டின் புலவர் அரசனை நோக்கி, "பொதுக்கடவுளர் பொருட்டுச் சிலர் வெர்பேனையும் புல்மேடையினையும் அமைத்தனர்; சிலர் தீயையும் தண்ணீரையும்............ தங்கள் நெற்றியில் வெர்பேனையும் கட்டிக்கொண்டு கொணர்ந்தனர்" எனக் கூறியுள்ளார். இந்த 'வெர்பேன' என்பது 'ப்ரெஸ்மன்' என்பதைப் போன்றது—குசைப்புல்லைப் போன்றது—யாகமேடைக்கு அமைப்பது. இதுவே இட்டாலியில் 'ப்லாமென்' எனவும், பாரசீகத்தில் 'பரெஸ்மன்' எனவும் ரிக்வேத இந்தியாவில் 'ப்ரமன்' எனவும் வழங்கப்பட்டது என்பது இதுகாறும் கூறியவற்றால் நன்கறியலாம்.*

---

* "ப்ராமன்: இச்சொல் ரிக்வேதத்தில் ஒன்றன்பாலிலும் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் அது 'சுலோகம், ஆசிரியன், ஓதுவான், ஓதுவான் மகன், ஆசிரியன் மகன், புரோகிதன்' என்னும் பல பொருள்களில் வந்துள்ளது" எனக் கூறும் நிருபேந்திர குமார் டட் (புத். I, பக். 40) கூற்று இங்கு நோக்கத் தக்கது.

அங்ஙனமாயின் 'ப்ரஹ்மன்' என்பதில் உள்ள 'ப்ரஹ்' என்பது பகுதியாகும். இதில் 'ர்' என்பது, முற்பட்ட 'ல்' என்பதற்குச் சமம். 'ப்ஹ்' (bh) என்பது லாட்டின் மொழியில் 'ப்' (f) ஆகும். எனவே, 'ப்லாமென்' (flamen) என்பது 'ப்ராமன்' (bhraman) என வரும். 'த்ரஹித்' என்பது (பாரசீகச்சொல்) வடமொழியில் 'த்ராங்மா' எனவரும். எனவே, 'பரேஸ்மன்' என்பது வடமொழியில் 'ப்ராமன்' என வரும்.

இதுகாறும் கூறியவற்றால்,

லாட்டின்	—'ப்லாமென்'	என்பன ஒரு பொருளன—ஒரே தொழிலையுடைய புரோகிதனைக் குறிப்பன என்பது நன்கறியலாம்.
பாரசீக	—'பரேஸ்மன்'	
சம்ஸ்கிருத	—'ப்ராமன்'	

எனவே, இச் சொல் மூலம், இவ்வாரியார் பொது இடத்தினின்றும் பிரிவதற்கு முன்னரே ஏற்பட்டதென்பதும், புரோகிதக் கூட்டம் அம் மூல இடத்திலேயே இவர்கள் பிரிவதற்கு முன்னரே இருந்திருத்தல் வேண்டும் என்பதும், ஒருவகைக் கொலைவேள்வி அவ்விடத்திற்றானே நடைபெற்று வந்ததென்பதும், குறைந்த பக்ஷம் உயர் இருசாதிகள் அப் பழைய காலத்திலேயே உண்டாகி (சிறந்த வேறுபாட்டோடு இல்லை) இருத்தல் வேண்டும் என்பதும் இதுகாறும் கூறிய விளக்கமான விவரங்களால் நன்கறியலாம்.

[இவ்வாராய்ச்சிக் கட்டுரை, C. M. மல்வநி, M. A. B., Litt., என்பாரது 'இந்திய-ஐரோப்பிய மொழி' என்னும் ஆராய்ச்சி நூலைக்கொண்டும் (பக். 93-95), ஹூக்ளி-கல்லூரிச் சரித்திரப் பேராசிரியரான நிருபேந்திர குமார்டட், M.A., என்பாரது 'இந்திய சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலைக்கொண்டும் எழுதப்பெற்றது.]

செய்திகளும் குறிப்புக்களும்

தமிழ் இசைச் சங்கம்

நம் செந்தமிழ் நாட்டுக்கு இவ்விருபதாம் நூற்றாண்டிற் கிடைத்திருக்கும் அரிய பெரிய பேறுகளுள், **பல்கலை வள்ளல் செட்டிநாட் டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்** நன்முயற்சியினால் நிகழ்ந்து வருகின்ற **தமிழிசை இயக்கம்** ஒன்றாகும். தமிழின் இனிமைக்குப் புதிய உயிரும் மலர்ச்சியும் உண்டாவதற்கு இந்த இயக்கமே, இப்பொழுது தலைசிறந்த இயக்கமாய் இருக்கின்றது. பொது மக்கள், செல்வர்கள், கற்றோர் முதலிய எல்லா வகையான நன்மக்களுக்கும் இன்பமும் கிளர்ச்சியும் கொடுத்து, அவரவர் உள்ளத்துக்குப் பெருவிருந்தாய் இருப்பது இசையாகும். அத்தகைய **இன்னிசையில், தமிழ் மணமே முழுவதும் கமழுமாறு** திரு. செட்டிநாட்டு வள்ளலவர்கள் இவ்வியக்கத்தின் வாயிலாக முயன்று வருவதனால், தமிழுக்குச் சிறந்த மறுமலர்ச்சி உண்டாகப் போவது மிகவும் உறுதியேயாம்.

அண்மையில், **தமிழ் மக்களின் உயிர்போன்ற** இத் தமிழிசை இயக்கம், சென்னையில் **தமிழிசைச் சங்கம்** என்று ஒரு சங்கத்தையும் நிறுவி இருக்கின்றது. வள்ளல் அவர்கள் அழைப்புக்கிணங்கி 19-4-43-ம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, அவர்கள் அடையாற்று மாளிகையில் மேற்குறித்த சங்கத்தின் நன்கொடையாளர்களின் கூட்டம் குழுமியது. தக்க பெரியோர்கள் பலர் வந்திருந்தனர். விருந்துக்குப் பின் இசையரசு **தண்டபாணி தேசிகரவர்களின்** தமிழ் இன்னிசையரங்கு சிறப்பாக நடைபெற்றது. ஏறக்குறைய **நான்கு லட்சம் ரூபாவுக்கு மேலாகவே**, தமிழிசைச் சங்கத்திற்கு **நன்கொடை** சேர்க்கப்பட்டிருக்கின்றது.

அரசர் சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைவராகவும் **சர் R. K. சண்முகஞ் செட்டியார் அவர்கள்** துணைத் தலைவராகவும், இச் சங்கத்திற்கு அமைந்துள்ளனர். **திவான்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார்** முதலிய பெருமக்கள் பலர், இச்சங்கத்தில் ஊக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

இச் சங்கத்திற்கு அரசியற் பதிவு பெறவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவென்று தெரிகின்றது.

காரியவெற்றியும், தமிழ்மொழி ஊக்கமும், மதிவன்மையும், பலவகைத் துணைநலங்களும் ஒருங்கு பொருந்திய பெருமக்கள் பலர் தகுமுறைகளோடு மேற்கொண்டு செல்லும் **இவ்வரிய பெரிய தமிழிசைச் சங்க நன்முயற்சி** எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் இத்தமிழகத்திற்

பேராற்றலோடு எக்காலும் இனிது நடைபெற்றுச் செந்தமிழ்ப் பாடலிசையைச் செழிக்கச் செய்துவர வேண்டுமென்று பெரிதும் விரும்புகின்றோம்.

தமிழ் நங்கை பண்டைச் சங்ககாலத்திலும் மேலாக, வாவரச் செழுமையுற்றுத் தனியரசு நடத்துவதற்கு முயற்சி செய்வார் எவரெவரோ அவர்கள் பெயர்களே இத்தமிழகத்தில் என்ஞான்றும் நிலைபெற்று விளங்கும். அயல்மொழிக் கலப்பினாலும் அயலினத்தார் சேர்க்கையினாலும் தமிழ் நங்கையின் பிற்கால வாழ்வு சுருங்கி நிற்றலையே நன்றாய் அறிகின்றோமாதலையால், இனி அப் பிறமொழி முதலிய கலப்பினின்றும் தமிழ் நங்கையை விடுவித்துச் சீராட்டுதலே கட்டாயமாகச் செயற்பாலது என்பது விளங்குகின்றது. ஆதலின், வள்ளல் செட்டி நாட்டரசர் அவர்கள், தனிச் செந்தமிழ்ப் பாடலால் இசைவளர்க்கும் நன்முயற்சிக்குத் தமிழ் மக்கள் எல்லா வகைகளிலும் ஒற்றுமையுற்று நின்று அவர்கள் அரும்பெரும் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பது இன்றியமையாக் கடமையாகும்.

பழநி, திருப்புகழ் மாநாடு

முருகன் எழுந்தருளியிருக்கும் திருப்பழநித் திருப்பதியில், 1943 ஆண்டு மேமீ ௯௨ முதல் ௧௨ வரை மூன்று நாட்கள், திருப்புகழ் மாநாடு திருவனந்தபுரம் உயர்நீதி மன்றத்தின் தலைமை நடுவராகிய திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் B.A., B.L., தலைமையில் நடைபெறும்.

மேமீ 9-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பழனி சைவசித்தாந்த சபை இரண்டாவது ஆண்டு நிறைவு விழா கோவை சிவக்கவிமணி சிவத்திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மேமீ 10-ம் நாள் திங்கட்கிழமை திருமுறை திருப்புகழ் விழா, சூரியனார் கோயில் ஆதீனம் மறைத்திரு. மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஐந்து நாட்கள் இங்ஙனம் நடைபெற விருக்கும் பெருவிழாவில் கல்வியும் ஆராய்ச்சியும் வல்ல பேரறிஞர்களின் சொற்பொழிவுகள் பல நடைபெறும்.

சாமிநாதையர் திருநாள்

சென்னை, கோகலே மண்டபத்தில் **தமிழ்ப் பேராசிரியர் சாமிநாத அய்யரவர்கள்** திருநாள் 28-4-43-மாலை திரு. வி. வி. சீனிவாச அய்யங்கார் தலைமையில் கொண்டாடப்பெற்றது. அப்போது திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், K. பால சுப்பிரமணிய அய்யர், உருக்குமணி தேவி, T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலியோர் சாமிநாதையர் அவர்கள் தொண்டும் வாழ்க்கையும் பற்றிப் பாராட்டிப் பேசினார்கள். முடிவில் ஆசிரியர் வாழ்க்கை நடத்திய இல்லத்தை விலைக்கு வாங்கிச் 'சாமிநாதையர் கழகம்' என ஒன்று அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சாமிநாதய்யர் அவர்கள் தமிழ்க்கு எடுத்திருக்கும் உழைப்பும், செய்திருக்குந் தொண்டும் மிகவும் பாராட்டற்பாலன. அவர்கள் நினைவுக்காக அமையும் அமைப்புக்கள் எவையும் எல்லாராலும் மகிழ்ச்சியாக வரவேற்கத் தக்கன. தக்க ஏற்பாடுகள் விரைவில் நிறைவேறி நிலைபெறுமாக!

சென்னை நக்கீரர் கழகம்
நக்கீரர் தமிழ் இலக்கிய வகுப்பு

பெண்கள் பகுதி: மேற்படி தமிழ் இலக்கிய வகுப்பில் தைத் திங்களிலிருந்து ஒவ்வொரு **சனிக்கிழமையும் மாலை 3 மணி முதல் 4 மணி வரை "பெரிய புராணம்"** வகுப்பு திருமதி வித்துவான், **K. இலக்குமித் தாயாரம்மாள்** அவர்களால் (தமிழாசிரியர், உயர்நிலை ஆசிரியப் பயிற்சிப் பெண்கள் பாடசாலை) சென்னை பெத்து நாய்க்கன் பேட்டைச் சிவஞானம் பார்க்குக்கு அருகில் உள்ள **சைவ உயர்தர ஆரம்பப் பாடசாலையில்** நடத்தப்படுகின்றது.

சென்னை நக்கீரர் கழகம்
புலவர் விழா

மேற்படி கழகத்தின் சார்பில் சென்னைத் தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளியில், **4-4-'43, 7-4-'43, 14-4-'43, 21-4-'43 28-4-'43,** ஆகிய நாட்களில் **புலவர் விழா** கொண்டாடப்பட்டது.

முதல் நாள் சென்னை நகராண்மைக் கழகத் தலைவர் **இராவ்பகதூர் திரு. C. தாதுலிங்க முதலியார்** அவர்கள் தலைமை தாங்கினர். கழகப் புலவர், திரு. **இளவழகனார்** அவர்கள் அரியதொரு விரிவுரை செய்து

புலவர் விழாவினைத் துவக்கி வைத்தனர். மேற்படி விழாவில் ஐந்து நாட்களிலும் "தொல்காப்பியர்" முதலாக 26 புலவர்களைப்பற்றி 24 தமிழ் வித்வான்கள் மிக அழகாகச் சொற்பொழி வாற்றினர்.

மதிப்புரை

குடும்ப விளக்கு :—இயற்றியோர் : பாரதிதாசன். வெளியிட்டோர் : புதுவைப் பாரதசக்தி நிலையத்தார். விலை அணா 6.

இது கவி நூல். இதன் முற்பகுதி 122 அடிகளுடைய ஆசிரியப் பாவினாலும், இடைப்பகுதி 53 அறுசீர் விருத்தங்களாலும், இறுதிப்பகுதி 16 எண்சீர் விருத்தங்களாலும் இயன்றிருக்கின்றன. உரை நடையில் ஒரு சிறிய ஆக்கியோர் முன்னுரையும், அகவற் பாவில் கல்லல் பண்டித இரத்தினம் அவர்களுடைய ஒரு சிறப்புரையும் நூலின் முகப்பில் உள்ளன.

நூலின் தலைப்புக் கேற்றபடி இந்நூல், குடும்பத்துக்குச் சிறந்த வாழ்க்கை யறிவை விளக்கும் ஓர் அரிய குடும்ப விளக்காகவே விளங்கு கின்றது. தமிழ் மொழிக்கு இக்காலத்திற் செய்ய வேண்டிய அருந் தொண்டு ஒன்றை இந்நூல் செய்திருக்கின்றது. பண்டைக்காலத்தில் சங்கநூற் பாட்டுக்கள் பெரும்பாலும் வாழ்க்கையின் விளக்கங்களாகவே உள்ளன. இடைக்காலத்தில் மக்கள் மறுமை மறந்து வாழ்ந்தபோது, அம் மறுமை உணர்வைப்பற்றிய பாட்டுக்கள் பெருக எழலாயின. பிற் காலத்தில் இம்மை யுணர்வை மறந்து மறுமை யுணர்வையே பெரிது பேசி, வாழ்க்கை வேறுனமையால், இம்மையின் நல்வாழ்வைப்பற்றிய முயற்சிகள், அறிவுரைகள் இக்காலத்தில் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. குடும்ப விளக்கென்னும் இந்நூல், இப்போது காலத்திற்கேற்ற சிறந்த தொண்டினைச் செய்திருக்கின்றது.

வாழ்க்கைக்குப் பலவகை உணர்ச்சிகள் இன்றியமையாதன. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோர் உணர்ச்சியையே மிகுத்தெடுத்துப் பேசுதலும், தனித்தெடுத்துப் பேசுதலும் அவ்வவ் வுணர்ச்சியாளர்களின் இயல்பாய் இருக்கின்றது. இதனால், உலகில், காலந்தோறும், செயல்களும் நோக்கங் களும் வேறுபாடு உள்ளனபோல் தோன்றி, மேன்மேற் கட்டாயமான தொண்டுகளுக்கு, இடஞ்செய்து வருகின்றன.

'குடும்ப விளக்கு' என்னும் இந்நூலை ஆக்கியோர், "முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்குமென்பது பற்றிய என் எண்ணந்தான்

இந்தச் சிறிய நூல். நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்!'' என்று தமது முன்னுரையிற் கூறியிருக்கின்ற பகுதி, தக்க அறிவுத் திவலையாய்ச் சிறந்து நூலின் உட்பொருளையும் எடுத்துக் காட்டுவதாய் விளங்குகின்றது.

பாரதிதாசனார் சீர்திருத்தமான கருத்துக்கள் உடையவர். இக் கருத்துக்களைக் கவர்ச்சியான வண்ணங்கள் தீட்டி எழுத்தோவியும் புனையும் வன்மை படைத்தவர். தெறிக்குஞ் சொற்களால், மிடுக்கு நடையிற் செய்யுட்கள் இயற்றவல்லவர். இச் சிறப்புக்கள், இந் நூலிலும் எங்குந் திகழ்ந்து மிளிர்கின்றன.

விடியற்காலையில் துயில் எழுவதிலிருந்து இரவு துயில்கூடும் வரையிலும், குடும்பத்துக்கு விளக்காகிய ஒரு மாது, சற்றுஞ் சோம்பாது அன்பும் பொறுப்புங் கொண்டு நடந்துகொள்ளும் இனிய முறைமை இந்நூலில் அழகாக விளக்கப்பட்டுள்ளது. கணவன், மாமன், மாமி, நாத்தி, குழந்தைகள் முதலியோர் ஒழுகலாறுகளும் அங்கங்கும் வருகின்றன. தாய், குழந்தைகட்குக் கல்வி பயிற்றல், குடும்பத்தை இசையரங்கமாய் நிறுத்தி மகிழ்வூட்டல், அட்டில் செய்தல், தையல் தைத்தல், பண்டங்களை விலை பேசல், வீட்டுக் கணக்கெழுதல், மருத்துவம் பார்த்தல், அளவளாவிப் பழகல், கணவன் அலுவலிலும் பங்குகொள்ளல், அறிவுரை கூறல், குழந்தைகளை வளர்த்தல் முதலிய பல வகையான குடித்தனத் திறமைகளையும் ஆசிரியர் இச் சிறு நூலில் கருத்தாக அடக்கிப் பெய்து விளக்கி யிருக்கின்றார். நூன்முழுமையும் அன்பும், ஒற்றுமையும், இரக்கமும், உதவியும், துணையும், சிறப்பாக விளங்குகின்றன.

பாரதிதாசனார் செய்திருக்கும் இத்தொண்டு தமிழுலகுக்குப் பெரிதும் பயன்தரவல்லது. இந்நூல் பெருகப் பரவுக என விரும்புகின்றோம்.

குழந்தைகள் பள்ளி விட்டு
வந்தார்கள் ; குருவிக் கூட்டம்
இழந்தநல் லுரிமை தன்னை
எய்தியே மகிழ்வ தைப்போல்
வழிந்தோடும் புதுவெள் ளத்தை
வரவேற்கும் உழவ ரைப்போல்,
எழுந்தோடி மக்கள் தம்மை
எந்தினள் இருகை யாலும்.

—குடும்ப விளக்கு.

குண்டலகேசி அகவல்: ஆசிரியர் : சுத்தானந்த பாரதியார். வெளியிட்டவர்: அன்பு நிலையத்தார், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை அணு 4.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றுன குண்டலகேசி என்பது இப்போது கிடைக்கவில்லை. காப்பியம் கிடைக்காது போயினும் கதையேனும் தமிழ் மக்கள் அறிந்துகொள்ளும்படி ஆசிரியர் இந்நூலில் முயன்றிருக்கின்ருர்; கதை, சுவை மிக்கது. கவிநலம் பொருந்திய எளிய இனிய அகவற்பாவால் இந்நூல் இயற்றப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களிடம் இது பரவுதற்குரியது.

தமிழர் கலைச்செல்வங்களாகிய கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்கும் முயற்சி :—ஆக்கியோர் : தமிழ் பெருங்கவி முதுபெரும்புலவர் ராவ்சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், G. B. V. C. Retired Dy, Supdt., C. V. Dept. வெள்ளக்கால்.

இது உரைநடை நூல். தமிழ் நாட்டில் தன்மதிப்பியக்கத்தார் கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் பற்றிப் பேசிவரும் வாதங்களும் அவைகளுக்கு எதிர்வாதங்களும் இதன்கண் வருகின்றன. வெள்ளக்கால், முதுபெரும் புலவரவர்கள் இதன்கண் ஆணித்தரமான விடைகள் அளித்திருக்கின்ருர்கள்.

மன்னர்குடி அரங்கசாமி முதலியார் மாணவர் இல்லத்தின் வெள்ளி விழா மலர் :—வெளியிட்டோர் : மாணவர் இல்லத்தார்.

3-4-43-ல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் துணைத்தலைவர் M. இரத்தினசாமி M.A. (Cantab) Bar-at-law C.I.E. அவர்கள் அரிய தலைமையில் இம்மாணவர் இல்லத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சி இனிது நடைபெற்ற குறிப்பு இதன்கண் விளக்கப்பட்டுள்ளது. மாணவர் இல்லத்தை நிறுவியோர் முதலிய தக்கோர் உருவப்படங்களும் இவ்விழாவில் பெருமக்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்களின் அரிய சொற்பொழிவும் இவ்விழாவில் நடைபெற்றுள்ளது.

வெள்ளி விழா மலர் இல்லம் நிறுவியோரது அரிய வரலாற்று குறிப்புடன் மறைந்திரு, விபுலானந்த அடிகள் முதலிய அறிஞர் பெருமக்களின் அரிய கட்டுரைகளும் வேறு பற்பல அறிய குறிப்புக்களும் அடங்கி இருக்கின்றன. இம் மலர் காணவும் கருதவும் மிக்க இன்பம் அளிப்பதாய் உள்ளது.

சித்தாந்த வினுவிடை (6 உரையாடல்கள்)

பள்ளிக்கூடங்களில் மாணவர்களைக் கொண்டு சித்தாந்தக் கருத்துக்கள்பற்றி உரையாடல் நடத்துவதற்குப் பெரிதும் பயன்படும். இதன் விலை அணு 3

அதிவீரராமர் அறநெறி

கழகப் புலவர் **இளவழகனூர்** எழுதியது. இதன்கண், அதிவீரராம பாண்டியர் அருளிய **வெற்றி வேற்கை** என்னும் நீதி நூல் எளிய முறையில் ஆராயப்பட்டிருக்கின்றது. அதிவீரராம பாண்டியர் சங்க இலக்கியங்களிலுள்ள சிற்சில கருத்துக்களை எளிமையாக்கிக் கொடுத்திருப்பது அறிந்து மகிழ்தற்குரியது.

இதன் விலை அணு 10 பரிசுப் பதிப்பு அணு 15

ஔவையார் திருவுள்ளம் (கழகப் புலவர் இளவழகனூர்)

விலை அணு 12 பரிசுப் பதிப்பு ரூ. 1

கலித்தொகைச் சொற்பொழிவுகள் (2-ம் பதிப்பு)	ராப்பர் அணு 14
திருக்குறள் முச்சீர் மணிகள் உரையுடன்	அணு 2
திருக்குறள் நாற்சீர்மணிகள் உரையுடன்	அணு 2
ஷேக்ஸ்பியர் கதைகள் 7-ம் புத்தகம்	அணு 12
சீவகசிந்தாமணி ஆராய்ச்சி	ரூ. 2 0
மணிமேகலைச் சுருக்கம் அடிக்குறிப்புடன்	ரூ. 2 0
பாலமிழ்தம் (The Milk Nectar)	ரூ. 1 4
கழகத் தமிழ் விஞவிடை (முதற் பாகம்)	0 3
பன்னிரு பாட்டியல் விளக்கக் குறிப்புடன்	1 4
யசோதர காவியம் உரையுடன்	(அச்சில்)

வெளியார் பதிப்புக்கள்

பேரூர் பங்குனி உத்தரத் திருவிழா மலர்

சிறந்த கட்டுரைகளும் படங்களும் அடங்கியது.

விலை அணு 14

லக்ஷ்மி கடாக்ஷம் முதலிய கதைகள்	ரூ 1 8
பள்ளிப்பந்தயம் படங்களுடன்	அணு 3
சின்னதேவி (தி. நா. சுப்பிரமணியன்)	அணு 12

குடும்ப விளக்கு

பாரதிதாசனுர் நல்ல குடும்ப வாழ்க்கையைப்பற்றிப் பாடியிருப்பது: படிக்கப் படிக்க இன்பம் தருவதாகும். அணு 6

எதிர்பாராத முத்தம் (பாரதிதாசனுர்)	அணு 8
இசையமுது	அணு 6

Reg. No. M. 1725 Apr.- May. 1943

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி

ஆதி குமரகுருபர சுவாமிகள்

ஞாபகார்த்த

சைவசித்தாந்த சாத்திரப் பரிசு.

ரூ. 1,000/- (ஆயிரம்.)

❁

விவரங்களுக்கு:

தஞ்சாவூர் ஜில்லா, திருப்பனந்
தாள் காசி மடத்திற்கு எழுதித்
தெரிந்து கொள்ளலாம்.

❁

குறிப்பு:—ஷை பரிசுக்குரிய எண்டௌமெண்டு அண்ணாமலை யுனிவர்ஸிட்டி ஸிண்டிகேட், செனட் மீட்டிங்குகளில் முறையே 30-1-43, 27-3-43-ந் தேதிகளில் அங்கீகாரம் பெற்றிருக்கிறது.

Printed by Mr. C. M. GOVINDARAJAN, at The Progressive Printers, 2/17, Coral Merchant Street, G.T., Madras. Edited and Published by Mr. V. Subbiah for The S. I. S. S. W. P. Society, Tinnevelly, Ltd. No. 6, Coral Merchant St., G.T. Madras.